திகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 29 வியாழக்கிழமை (14.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இராணுவம் தேர்தல் பணியில் ஈடுபடாது

# தேர்தல் முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ்.வந்த பிரதித்தேர்தல் ஆணையர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, தேர்தல் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.மொகமட் தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்கள் வதைபடும் போது பிறந்தநாள் கொண்டாட்டம் வேண்டாம்

### நடிகர் சரத்குமார் உருக்கமான அறிவிப்பு

(சென்னை)

ஈழத்தில் நிலவிவரும் அவல நிலையை கருத்தில் கொண்டு எனது பிறந்தநாளையொட்டி எந்த வித கொண்டாட்டத்திற்கும் நான் ஏற்பாடு செய்யவில்லை என நடிகர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

எனது ரசிகர்களும், சமத்துவ மக்கள் கட்சியினரும் ஏழைகளுக்கு நல உதவிகளை வழங்கி கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று நடிகரும்,

(02ஆம் பக்கம் பார்க்க)

## வேள்வியில் மிருகபலி தடுத்து நிறுத்த வேண்டும்

### நல்லை ஆதீன முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமயத்தின் பெயரால் இடம் பெறும் உயிர்ப்பலியை நிறுத்த அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேள்வி என்ற பெயரில் மிருக பலியிடுவதை, அன்பே சிவம் என்று உலகம்முழுவதையும்விழிக்கவைத்த சைவசமயம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. கவுணாவத்தையில்

(02ஆம் பக்கம் பார்க்க)

## தாய்நாட்டுக்கு எதிரான சதியை முறியடிக்க சர்வதேச அறிவு மிகவும் அவசியம் - ஜனாதிபதி

(கொழும்பு)

நாடு முகம் கொடுக்கும் நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கு உலக நடப்பு சம்மந்தமான தெளிவினைப் பெற்றிருப்பது மிகவும் முக்கியமாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

30 வருட யுத்தத்திற்குப் பின் நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கும் போது சில சக்திகள் தாம் செய்த தவறுகளை மறைப்பதற்காக எம் மீது குற்றம் சுமத்துகின்றனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

முழு உலகமும் பொருளாதார வீழ்ச்சிக்கு உட்பட்ட போதும் திட்டமிட்ட செயற்பாடுகளினால் இலங்கைக்கு அந்நிலையெழவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி நாடு முகம் கொடுக்கும் சகல சவால்களையும் எதிர்கொள்வதற்கு உலகளாவிய தெளிவு மிக அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

முகாமைத்துவப் பயிற்சிக்கு தகைமைபெற்றபட்டதாரிகளுக்குமக்கள் வங்கியில் தொழில் வாய்ப்பு வழங்கி அவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ, பொது முகாமையாளர் வசந்தகுமார், ஜனாதிபதியின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் நாட்டுக்கு எதிராக பிரசாரம்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் எதிர்க்கட்சிகள் நாட்டுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு தேவையான தகவல்களை வழங்கி வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இழுத்தடிக்காமல் கூட்டமைப்புடன் விரைவாக பேச வேண்டும்-ஐ.தே.க.

(கொழும்பு)


கூட்டமைப்புடனான பேச்சுக்களை இழுத்தடிக்காமல் அரசு தனது தீர்வுத்திட்டத்தை முன்வைத்து விரைவில் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் எனவும் இணக்கப்பாட்டுடன் எட்டப்படும் தீர்வை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஐக்கியதேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் பொது செய

(24ஆம் பக்கம் பார்க்க)

## நயினையில் இன்று தேர்



## மும்பையில் குண்டு வெடிப்பு 20பேர் பலி

(மும்பை)

இந்தியாவின் மும்பை நகரில் இடம்பெற்ற 3 தொடர் குண்டு வெடிப்புக்களில் குறைந்தது 20 பேர் பலியாகியுள்ளதாகவும், நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் மராட்டிய மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும் என்று அமைச்சர் சிதம்பரம் டில்லியில் தெரிவித்துள்ளார். (ந)

## தேர்தல் பாதுகாப்பை அறிய அமெ.அதிகாரி யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நேரில் ஆராய்வற்காக அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அலுவலர் ஜோன் எம்.டெஸ்ரெர் நேற்று யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்து அரச அதிகாரிகள், மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்களை சந்தித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார். (ந)

## அமைச்சர் பீரிஸ் பாகிஸ்தானுக்கு பயணம்

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று பாகிஸ்தானுக்கு பயணமானார்.

இரண்டு நாள் விஜயமாக அவர் பாகிஸ்தானுக்கு சென்றுள்ளார். அவர் பாகிஸ்தானிய ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

இடமாற்றம்

LANKA WALLTILE PLC & LANKA FLOORTILE PLC

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் 85ஆம் இலக்கத்தில் இயங்கி வந்த LANKA WALLTILE PLC & LANKA FLOORTILE PLC நிறுவனம் 16.07.2011 முதல் இல.469, K.K.S. வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு (வண்ணை சிவன் கோவிலிற்கும் மனோகரா தியேட்டருக்கும் இடையில்) இடமாற்றப்படவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்- LANKA WALLTILE PLC

(அ-3715)



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய சப்பறத் திருவிழா நேற்று இரவு இடம்பெற்றது. அம்பாள் சப்பறத்தில் வீதி உலா வருவதை படத்தில் காணலாம்.

## ஈழத்தமிழர்கள் வதைப்...

தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவருமான சரத்குமார் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள், ஈழத் தமிழர்கள் நிலை குறித்து நிரந்தர துயரம் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

ஈழத்தில் தவித்துக் கொண்டிருக்கும் தமிழர்களின் இன்றைய நிலை உலகில் எந்த நாட்டு மக்களுக்கும் ஏற்படக்கூடாத ஒன்று. ஜனாதிபதி ராஜபக்ஷ போர்க் குற்றவாளி என்று உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

போரில் கடுமையாக பாதிப்புக்குள்ளான தமிழர் பகுதிகளில் மறுசீரமைப்பு பணிகள் நடக்கிறதா நடக்கவில்லையா என்ற விபரம் தெரியவில்லை.

ஒரு தமிழன் கூட இடம்பெறாத அதிகாரிகள் கொண்ட குழுவை மத்திய அரசு அவ்வப்போது கண்துடைப்பிற்காக இலங்கைக்கு அனுப்பி வருகிறது. அதனால் எந்த ஒரு நிலையான பயனும் ஏற்படவில்லை.

இந்தச் சூழ்நிலைகளால் என்னுடைய பிறந்ததினமான இன்று (14.07.2011) எந்தவொரு விரிவான நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## புலிகளின் கப்பலே கைப்பற்றப்பட்டதாம்!

இந்தோனேசிய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 87 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற கப்பலான எம்.ஏ.ஹெலிஸ் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான கப்பல் என இந்தோனேசிய புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.


நியூசிலாந்து நோக்கி அகதிகளாக சென்ற 87 இலங்கையர்களை தாம் கைது செய்துள்ளதாக இந்தோனேசிய அதிகாரி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## வேள்வி...

இடம்பெற்ற மிருக பலி மேலும் சில ஆலயங்களில் இடம்பெற இருப்பதாக அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளோம். இத்தகைய மிருக பலிகளை நிறுத்தி எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்தும் உயரிய பண்பாட்டைப் பின்பற்றுவோம். இதனையே சைவ சமயம் வலியுறுத்துகின்றது.

எனவே வேள்வி என்ற பெயரில் இடம்பெறும் மிருக பலியை அனைவரும் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் நல்லை ஆதீன முதல்வர் கேட்டுள்ளார். (ந)

## றொகான் குணரட்னவுக்கு எதிராக கனடாவில் வழக்கு



கனடாவின் முன்னணி அமைப்பான கனேடியத் தமிழ் காங்கிரஸ் சிக்கப்பூரை மையமாக கொண்டியங்கும் றொகான் குணரட்ன மீதும் கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம பத்திரிகையின் மீதும் மான நஷ்டஈடு மற்றும் அவதூறு வழக்கொன்றை ஒன்ராரியோ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

கனேடிய தமிழ் காங்கிரஸ் தலைவர் உமாசுதன் சுந்தரமூர்த்தி பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் கனடாவில் புலிகளின் பிரதிநிதிகளாக கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் செயற்படுகிறார்கள் என்று றொகான் குணரட்ன லக்பிம பத்திரிகைக்கு தெரிவித்ததை எதிர்த்தே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கனேடியத் தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்விக்கும் ஒரு அமைப்பாகவே இருந்து வருகிறது என்றும் றொகான் குணரட்னவின் இக் கூற்று இந்த அமைப்பை களங்கப் படுத்துவதாகவும் தெரிவித்து ஒரு மில்லியன் டொலர்களை கனேடியத் தமிழ் காங்கிரஸ் கோரியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பு கனடாவில் கனேடியன் தமிழ் காங்கிரஸ் என்ற பெயரின் கீழ் இயங்குவதாக றொகான் குணரட்ன பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின்போது தெரிவித்துள்ளார் எனக்கூறி ஒன்ராறியோ உச்ச நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வீரமாகாளி அம்மன் ஆலய சப்பறம் முறிந்தது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய சப்பறம் நேற்று முறிந்து விழுந்தது. நேற்று சப்பறத்திரு விழாவில் மிக உயரமான சப்பறம் கட்டப் பட்டிருந்தது.

இவ்வாறு கட்டப்பட்ட சப்பறம் சுவாமியை ஏற்றுவதற்கு முன்னதாக முறிந்தது. முறிந்த சப்பறம் உடனடியாகக் கட்டப்பட்டு அதில் அம்மன் எழுந்தருளி வீதி உலா நடைபெற்றது. (ந)

## யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட 33 வீதிகளுக்கு காப்பெற்றிடும் பணி

### நேற்று ஆரம்பித்துவைப்பு



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட 33 வீதிகளுக்கு காப்பெற்றிடும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கைலாசப் பிள்ளையார் கோவிலின் முன்பாக இந்த வீதிகளுக்கு காப்பெற்றிடும் பணி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

33 வீதிகளுக்கும் காபெற் இடுவதற்கு என 247 மில்லியன் ரூபாயை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.ஹிஸ்புல்லா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-6)

## மகேஸ்வரன் சுடப்பட்ட இடத்தில் கைத்துப்பாக்கி ஒன்றை மீட்டேன்

### - சப் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(கொழும்பு)

மகேஸ்வரன் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்குள் சென்ற நான் பரிசோதனையில் ஈடுபட்டபோது கைத்துப்பாக்கி ஒன்றினையும் 7 வெற்றுத் தோட்டாக்களையும் கைப்பற்றினேன். அத்துடன் அங்கு காணப்பட்ட இரத்த மாதிரிகளையும் பெற்று அவற்றை இரசாயன பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன் என்று குற்றப் புலனாய்வு பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் சப் இன்ஸ்பெக்டர் விதானகே சந்தன பிரியந்த குமார சாட்சியமளித்தார்.

சுட்டுக் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலை வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. இதன்போது சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வழக்கு விசாரணையின் போது எதிரியான ஜோன்ஸ்டன் கொலின் வெலன்டைன் சிறைக்காவலர்களினால் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டிருந்தார். சாட்சியான சப் இன்ஸ்பெக்டர் விதானகே சந்தன பிரியந்த குமாரவை அரச சிரேஷ்ட சட்டவாதி பி.குமாரரட்ணம் நெறிப்படுத்தினார்.

இதன்போது சாட்சியமளித்த சப் இன்ஸ்பெக்டர் சந்தன, துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்ற பின்னர் கோவிலுக்குள் சென்று நான் பரிசோதனைகளில் ஈடுபட்டேன். கோவிலுக்குள் சென்ற போது பல இடங்களில் இரத்தம் காணப்பட்டது. அங்கு மேலும் பரிசோதித்த போது கைத்துப்பாக்கி ஒன்றும் 7 வெற்றுத் தோட்டாக்களையும் கண்டெடுத்தேன். இவ்வாறு மீட்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் வெற்றுத் தோட்டாக்களை பகுப்பாய்வுக்காக ஒப்படைத்தேன். இதேபோல் ஆலயத்திற்குள் காணப்பட்ட இரத்தத்தின் மாதிரிகளையும் எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பிவைத்தேன்.

ஆலயம் காணப்பட்ட வலயத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியுடனேயே கைப்பற்றப்பட்ட பொருட்களும் இரத்த மாதிரியும் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன என்று தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணையினை ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். வழக்கு விசாரணையின் போது எதிரியின் சார்பில் கொ.கிருஷாந்துடன் சிரேஷ்ட சட்டத்தரணி க.ஜெயக்குமார் ஆஜராகியிருந்தார்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர ஆலயத்தில் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது மகேஸ்வரன் எம்.பி.சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ந)

## திறந்த பல்கலைக்கழகம் பரீட்சை பிற்போடல்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் 16.07.2011 சனிக்கிழமை யாழ் பிராந்திய நிலையத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பொது ஆங்கில நிகழ்ச்சித்திட்டத்திற்கான தரப்படுத்தற் பரீட்சை மற்றும் 17.07.2011 ஞாயிற்றுக்கிழமை இராஜகிரிய, ஜனாதிபதி பாலிகா வித்தியாலயத்தில் நடத்துவதறகுத் திட்டமிடப்பட்டிருந்த கல்வியியல் முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கான தெரிவுப்பரீட்சை என்பன தவிர்க்க முடியாத காரணங்களினால் நடைபெறமாட்டாது என யாழ் பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)


## விற்பனையாளர் தேவை


யாழ். நகரில் இயங்கும் எமது பிடவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண்/பெண் பிடவை விற்பனையாளர் தேவை.

**சிவகணேசன் பிடவையகம்,**
**41, பெரிய கடை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-3735)


## நயினையிலே மலர்ந்த அன்னை

அலைகடலின் நுரைமீது அமர்ந்த அன்னை
அடியார்கள் துயர்தீர்க்கும் அமுத அன்னை
சிலை உருவாய் சிரம் விரித்து ஆடும் அன்னை
சிந்தனைக்கு அப்பால் சிறந்த அன்னை
கலைமுழுதும் கற்பகமாய் பொழியும் அன்னை
கருணைநிறை கடைக்கண்ணே கனிவாம் அன்னை
மலைமகளாய் நயினையுறை நாகம்மாளே
மாட்சிபுரி நயினையிலே மலர்ந்த அன்னை



அனலைநகர் ஐயனார் அலைகள் தாண்டி
அரும்புமலர் போதெனவே ஆய்ந்துகொண்டு
உனதருளின் அருட்பார்வை உறைந்ததாலே
உம்பர்களும் வந்திறங்கி இறைஞ்சுவார்கள்
வரும்வழியில் கருடனுறை கல்லைக்கண்டு
காத்திடுவாய் நாகத்தை என்றே வேண்ட
பொருளனைத்தும் கோயிலிலே போட்டுவிட்டால்
போவேனே நான் என்று புகட்டி நின்றதே

நின்தலத் தோற்றத்தின் சாட்சியாய் அம்மா
பெருங்கடலில் கருடசர்ப்பக்கல்லும் காட்டிடுமே
நின்தலம் நயினைப் பதிதனில் நிறுவித்த அடியார்க்கிரங்கிய
நிலைக்கின்ற தான்தோன்றியன்னையே
ஆடிவரும் ஓடமதில் உனைத்தேடி
நாடிவரும் அடியார்க்கு அருள்புரிந்தே
ஆடி அசைந்து வரும் சிற்பம் நிறை சித்திரத்தேரினிலே
அமர்ந்த அழகொரு அருள் சிந்திடவே வந்தருள்வாய் நாகம்மையே

தாயாகி வளர்த்தனை போற்றி - என்
வாழ்நாள் ஆகிய பொருளே போற்றி போற்றி

(3736) **எஸ்.கவிகரன் (கோவையூர்கவி)**


யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும்

## அருணகிரிநாத சுவாமி விழா 2011

*இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்*

*காலம்:- 15.07.2011 வெள்ளிக்கிழமை*

*நேரம்:- முற்பகல் 10.00 மணி*

சிறப்பு சொற்பொழிவு வழங்குவர்
**சைவப்புலவர் திரு.க.நித்தியதசிதரன் ஆசிரியர்**

வாராந்த நிகழ்வின் விரிசையில்
**சங்கீதபூஷணம் செல்வி தங்கலெட்சுமி செல்லத்துரை**
அவர்களின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.
பேரவையினர், சந்நிதியான் ஆச்சிரமம்.

(சி-3722)

# இன்று ஒரு தகவல்

## மூத்தோர் பெருமை

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார்.

அவருக்குப் பிறகு இளவரசன் பட்டத்திற்கு வந்தான்.

இந்த இளவரசனுக்கு ஒரு குணம்... அதாவது, அவனுக்கு வயதானவர்களைக் கண்டால் பிடிக்காது!

"இளைஞர்களின் வளர்ச்சிக்குப் பெரியவர்கள் இடையூறாக இருக்கிறார்கள்!" என்று அவன் நினைத்தான்.

அதனால் அவன் என்ன செய்தான்... பட்டத்திற்கு வந்ததும் ஓர் உத்தரவு போட்டான்.

"இந்தத் தேசத்தில் பெரியவர்கள் யாரும் இருக்கக் கூடாது. அவர்களையெல்லாம் நாடு கடத்திவிட வேண்டும். இந்த உத்தரவை மீறி யாராவது வயதானவர்களைத் தங்கள் வீட்டில் வைத்திருப்பதாகத் தெரிந்தால், அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்!" என்று உத்தரவிட்டான்.

எல்லோரும் இந்த உத்தரவுக்குப் பயந்து அவரவர்களின் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி அனைவரையும் வேறு தேசத்திற்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

இளைஞர்களை மட்டும் வைத்துக் கொண்டு இந்த இளவரசன் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தான்.

இப்படி இருந்த காலத்தில் அந்நிய நாட்டிலிருந்து ஒரு வித்தைக்காரன் வந்தான்.

அவன், "என்னுடன் போட்டியிடக் கூடிய புத்திசாலிகள் யாராவது இந்தத் தேசத்தில் உண்டா?" என்று சவால் விட்டான்.

இப்படி வித்தைக்காரன் சவால் விட்டது அந்த இளவரசன் காதுக்கு எட்டியது.

அவன் உடனே வித்தைக்காரனை அழைத்துக் கொண்டுவரச் சொன்னான்.

வித்தைக்காரன் வந்தான்.

"என்ன உன் சவால்? அதைச் சொல்!" என்று இளவரசன் கேட்டான்.

வித்தைக்காரன், "இளவரசே! வேறு ஒன்றுமில்லை... சாம்பலைக் கயிறாகத் திரிக்க வேண்டும் – இது ஒரு போட்டி! பிறகு மற்றொரு போட்டி – இதோ இந்தச் சங்கில் நூலைக் கோர்த்துத் தர வேண்டும்... அவ்வளவு தான்!" என்றான்.

இளவரசன் யோசித்தான்... "இரண்டுமே சாத்தியமில்லாத விடயம்" என்பதை உணர்ந்தான்.

சாம்பலைக் கயிறாகத் திரிப்பதும் கஷ்டம்! சங்கில் ஒரு பக்கம் நூலை விட்டு இன்னொரு பக்கம் இழுப்பதும் கஷ்டம்... ஏனென்றால், நூல் வளைந்து வளைந்து போக வேண்டியிருக்கும்!

இப்படி இன்னொரு தேசத்திலிருந்து வந்தவன் போட்ட சவாலைக் கேட்டு இளவரசனுக்கு அவமானமாகி விட்டது!

எனவே, இளவரசன், "இந்த வித்தைக்காரனின் சவாலை ஏற்றுக் கொள்வதற்கு இந்தத் தேசத்தில் இளைஞர்கள் யாருமே கிடையாதா?" என்று கேட்டான்.

அதை ஊர் முழுவதும் அறிவிக்கச் சொன்னான்.

ஒரே ஓர் இளைஞன் மட்டும் வந்தான்.

அவன், "என்னால் முடியும்" என்றான்.

இளவரசன் ஆச்சரியத்துடன், "எங்கே சாம்பலைக் கயிறாகத் திரித்துக் கொண்டு வா, பார்க்கலாம்!" என்றான்.

இளைஞன், "கொஞ்சம் இருங்கள்..." என்று கூறிவிட்டு அடுத்த அறைக்குச் சென்றான். சிறிது நேரத்தில் ஒரு தாம்பாளத் தட்டோடு திரும்பி வந்தான்.

அந்தத் தட்டில்... சாம்பலில் திரிக்கப்பட்ட கயிறு இருந்தது!

அதைப் பார்த்து எல்லோரும் வியப்படைந்தார்கள்.

சரி... அடுத்து சங்கில் நூலைக் கோர்க்க வேண்டும்...

இளைஞன் மறுபடியும், கொஞ்சம் இருங்கள் என்று கூறிவிட்டு சென்றான். சிறிது நேரம் கழித்து திரும்பி வந்தான்.

அவன் கையில் ஒரு சங்கு... அதில் ஒரு பக்கம் நூல் போய் இன்னொரு பக்கம் வெளியே வந்திருந்தது.

அந்நிய தேசத்திலிருந்து வந்தவன், தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பிப் போய்விட்டான்.

இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டினான். பரிசு கொடுத்தான். "நமது தேசத்தின் மானத்தைக் காப்பாற்றியதற்கு ரொம்ப நன்றி!" என்றான்.

அதன் பிறகு இளவரசன், "அது சரி ... அது எப்படி சாம்பல் கயிறு..." என்று மெதுவாகக் கேட்டான்.

"இளவரசே... அது ஒன்றுமில்லை. ஒரு கயிறு துண்டை வெட்டியெடுத்து தாம்பாளத் தட்டில் வைத்துக் கொளுத்தினேன். அது சாம்பலானதும் அசையாமல் மெதுவாக எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்!" என்றான் இளைஞன்.

"சங்கின் நூலை நுழைத்தது எப்படி?" என்று இளவரசன் வினவினான்.

அதற்கு இளைஞன், "ஓர் எறும்பை பிடித்து அதன் உடம்பில் மெல்லிய நூலைக் கட்டினேன். அதைச் சங்கின் ஒரு பக்கமாக விட்டேன். அடுத்த பக்கம் ஒரு சக்கரைத் துண்டை வைத்தேன். எறும்பு நூலை இழுத்துக் கொண்டு இந்தப் பக்கம் வந்துவிட்டது!" என்று பதிலளித்தான்.

இளவரசன், "இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"இளவரசே! என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்... உங்களுக்குத் தெரியாமல் எங்கள் அப்பா – அம்மாவையும், தாத்தாவையும் எங்கள் வீட்டிலேயே மறைத்து வைத்திருந்தேன். எங்கள் தாத்தாதான் இந்த யோசனையைச் சொன்னார்!" என்றான் இளைஞன்.

இளவரசன் யோசனை செய்தான். அவனுக்குத் தன் தவறு புரிந்தது. நாடு கடத்திய பெரியவர்களை எல்லாம் மறுபடியும் மரியாதையுடன் திருப்பி அழைத்துக் கொண்டு வந்தான். அவர்களின் அனுபவ அறிவுக்கு மதிப்பு கொடுக்க ஆரம்பித்தான்.

பெரியவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது என்பது இந்தக் கதையின் கருத்து.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோர் தொடர்பில் முறைப்பாட்டில் குறிப்பிடப்படுமிடத்து உடன் நடவடிக்கை

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பான முறைப்பாட்டின் போது பொதுவான முறைப்பாடுகளைத் தவிர்த்து சர்வதேச நபர்களை சுட்டிக்காட்டும் வகையில் முறைப்பாடுகள் செய்யப்படுமானால் உடன் நடவடிக்கை எடுக்க தாம் தயாராகவுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் செய்யப்பட்ட தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக பொலிஸார் பக்கச் சார்பற்ற முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை யாழ்.தேர்தல் முறைப்பாட்டு நிலையத்தில் 8 முறைப்பாடுகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பதிவு செய்துள்ளது.

இவை அனைத்துமே பொதுவான முறையிலேயே செய்யப்பட்டுள்ளது. ஒரு கட்சியின் மீது குற்றம் சாட்டும் வகையில் முறைப்பாடு செய்யப்படுமானால் அந்த கட்சி சார்ந்த அனைவரையும் எவ்வாறு கைது செய்யமுடியும்.

குற்றங்களோடு தொடர்புடையவர்களை சுட்டிக்காட்டி முறைப்பாடு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது இலகுவானத்தாக இருக்கும். மூவாயிரம் பேர் கொண்ட கூட்டம் ஒன்றில் ஒருவர் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டால் அவரை எவ்வாறு கைது செய்ய முடியும்.

சாட்சிகள் இன்றி ஒருவரை கைது செய்து சிறையில் அடைப்பதற்கு பொலிஸாரிடம் அதிகாரம் இல்லை. யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தில் ஜனவரி மாதம் மட்டும் 7 கொலைகள் இடம் பெற்றுள்ளது. வீடுகளின் கூரைகளைப் பிரித்து கொண்டு வீட்டுக்குள் புகுந்து கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபடுகின்றனர். இது வரை 15 தமிழ் சகோதரிகளின் தாலி கொடிகள் அறுக்கப்பட்டு ள்ளன.

இதை யார் செய்கின்றனர் தமிழர்கள் தான் செய்கின்றனர். அதற்கு எம்மிடம் ஆதாரம் உள்ளது. பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலர் குற்றத்தை செய்து விட்டு மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. மீது பொதுவான குற்றச்சாட்டுக்களை செய்கிறது. எம்மால் அந்தக் கட்சியின் ஆதாரவாளர்கள் அனைவரையும் கைது செய்ய முடியாது.

குற்றவாளி யார் என்பதை முறைப்பாட்டில் குறிப்பிட்டு காட்டப்படுமானால் அந்த நபரை கைது செய்து நீதிமன்றில் நிறுத்த நாம் தயாராகவுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் ஆயுதக் கலாசாரம் இருந்த போதும் இவ்வாறான கொலைச் சம்பவங்களும் அச்சுறுத்தல்களும் இடம் பெறவில்லை. ஆனால் தற்போது இடம் பெற்று வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# நூல் வெளியீடு

(அச்சுவேலி)

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில் "சோமஸ்கந்தன்" எனும் மலர் வெளியீடு பாடசாலை குமாரசுவாமி மணிமண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் ஆர். இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஸ்ணன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதில் வெளியீட்டுரையினை ஆணைப்பந்தி தமிழ் கலவன் பாடசாலை அதிபர் மு.முரளிதரன் ஆற்றுவார். ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக கணக்கியல்துறை பேராசிரியர் தி. வேல்நம்பி நிகழ்த்துவர். (ஸ்ரீ-2-70)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 |
| தக்காளி | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 |
| கோவா | 70 | 60 |
| கரட் | 60 | 60 |
| பூசணி | 25 | 20 |
| புடோல் | 40 | 45 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | -- |
| பயற்றங்காய் | 110 | 120 |
| லீக்ஸ் | 60 | 50 |
| பீற்றூட் | -- | 60 |
| கறிமிளகாய் | 80 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 190 |
| போஞ்சி | -- | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 |

# இராசி பலன்

14.07.2011
(ஆனி 29, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 01.14 மணிவரை
மூலம் முற்பகல் 9.46 மணிவரை
இராகுகாலம் 01.30-3.00 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
பூரணை விரதம்.

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கங்கள் விலகும், உடல் நலம் சீராகி உற்சாகமடையும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**இடபம்** குருவை வழிபட்டு குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**மிதுனம்** தெய்வ தரிசனமுண்டு, செல்வாக்கான நாள், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும்.

**சிங்கம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், குடும்ப தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன யோகமுண்டு, சுபசெய்திகள் வந்துசேரலாம். புதிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தொழில் நன்மையுண்டு, பிரயாண சுகமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** நல்ல காரியத்திற்கு அடித்தளமிடும் நாள், வருமானம் திருப்தி தரும், சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு திருப்திகரமாக அமையும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


**மகரம்** இடமாற்றம், ஊர்மாற்றம் செல்லும் எண்ணம் உருவாகும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வடையும் நாள்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

வளவன்

## கணிதபுதிர்ப் போட்டியில் தங்கப்பதக்கம்



(கரவெட்டி)

கணித புதிர் போட்டியில் தேசிய விருது வென்று யாழ்.நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவி தபேந்திரன் அபிஷா சாதனை படைத்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கணிதபுதிர்ப் போட்டியில் வடமாகாண அணி சார்பாக தலைமை தாங்கி தங்கப்பதக்கத்தை வென்று வடமாகாண அணிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

(ஶ்ரீ-24)

## உள்ளூராட்சி தேர்தலையொட்டி பாடசாலைகள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தலையொட்டி தேர்தல்கள் ஆணையாளரின் பணிப்பிற்கிணங்க, யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 23 ஆம் திகதி சனிக்கிழமையும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மூடப்படவேண்டுமென யாழ்.வலய கல்வி அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

## சிறுவர் இதழ் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சிட்டு என்னும் சிறுவர் இதழின் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இச் சிறுவர் இதழானது பிள்ளைகளின் பல்துறைசார் வளர்ச்சியினை மையமாகக் கொண்டு சிட்டு என்னும் பெயருடன் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-4)

## கவிதை நூல்களின் அறிமுகவிழா

நெடுந்தீவு முகிலனின் பயணிகள் கவனத்திற்கு, கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை போன்ற கவிதை நூல்களின் அறிமுகவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணியளவில் நெடுந்தீவு மணற்கடற்கரை ஓரத்தில் ஊர்காவற்றுறை பனை தென்னை அபிவிருத்திச் சங்க பொது முகாமையாளர் வை.ச.ஜெயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏஏ மூவிஸ் தலைவர் க.செவ்வேள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆ.சிறி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் நெடுந்தீவு பொறுப்பாளர் தானியேல் றெக்சியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஶ்ரீ)

# வடமராட்சியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் குடிநீர் திட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் குடிநீர்திட்டமொன்றினை தேசிய நீர் வடிகால் அமைப்பு சபையினர் ஆரம்பிக்கவுள்ளனர்.

இதனடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரித்து வருகின்றனர்.

மேலும் ஒரு கிராம அலுவலர் பிரிவில் 50 வீடுகளுக்கு தரிசிப்பு செய்து அக்கிராம மக்களின் குடிநீர் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான படிவங்களில் விபரங்களை பதிவு செய்து வருகின்றனர்.

வல்லிபுரக் கோயிலிலிருந்து வடராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்கும் பாரிய திட்டமொன்று ஏற்படுத்தப்படவிருப்பதாகவும் அதற்காக மக்களின் கருத்துக்கள் அறியப்படுவதாகவும் ஆசிய அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2-10)

# கொட்டடி நமசிவாய வித்தியாலயம் மூன்று பதக்கங்கள் பெற்றுச் சாதனை

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்கள் மூன்று பதக்கங்களை பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இவ் வெற்றிகள் மூலம் பதக்கங்களைப் பெற்ற மாணவர்கள் இருவரும் தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் 17 வயதின் கீழ் பிரிவில் இடம்பெற்ற 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் செல்வன் ஜெயேந்திரன் அபிமன் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளார். அத்துடன் 15 வயதின் கீழ் பிரிவில் நீளம் பாய்தல் போட்டியில் செல்வன் சுதாகரன் தமிழரசன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார். இவ் வெற்றிகள் இப்பாடசாலையின் வரலாற்றுச் சாதனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஶ்ரீ)

# தடகளப் போட்டிகளில் 17 வயதுப்பிரிவில் 3 தங்கப் பதக்கங்கள் வென்று சாதனை



(கரவெட்டி)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி வீராங்கனை வேலுமயிலு யோகமயிலினி தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவில் பங்குபற்றிய இவர் 100 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

இவ்வீராங்கனை முப்பாய்ச்சல் போட்டியில் 17 வயதுப்பிரிவில் வடமாகாண சாதனையை முறியடித்து 10.36 மீற்றர் தூரம் பாய்ந்து சாதனை நாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-24)

# காரைநகர் நீலங்காடு நீலகிரி மயானம் மக்கள் பாவனைக்கு

(காரைநகர்)

நீலங்காடு நீலங்கிரி மயானம் மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் நீலங்காடு நீலகிரி மயானம் கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது.

இதனால் காரைநகரின் பலகாடு, நிலங்காடு, தோப்புக்காடு, மடத்துவளவு, கருங்காலி, களபூமி போன்ற கிராமங்களை பல கிலோமீற்றர் தூரம் சென்றே எரித்து வந்தனர்.

இத்துடன் தனியார் காணியையும் சுடலையாக பயன்படுத்தி வருகின்றனர். இப்பொது மக்களின்முறைப்பாட்டினையடுத்து காரைநகர் கடற்படைத் தளபதியுடன் கலந்துரையாடிதன் பயனாக இம்மயானம் மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-246)

## ஆறுதலின் அறிவுப்பயணம்

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனத்தின் ஜுலை மாத அறிவுப்பாதை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட கணித புள்ளிவிபரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அறிவழகன் புள்ளிவிபரவியல் ஓர் ஆரம்ப அறிமுகம் என்ற விடயம் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். (ஶ்ரீ)

## தெய்வீக இசையரங்கில் பங்குபற்ற விரும்புவோருக்கு

நல்லூர் முருகன் மஹோற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் ஶ்ரீ துர்க்காதேவி மணிமண்பத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்களை மன்றப்பணிமனையில் உரிய படிவத்தைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு மன்றத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஶ்ரீ-4)

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து கல்லூரியின் கனிஷ்ட இடைநிலை பிரிவினருக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர்.அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சட்டத்தரணி திருமதி ஞானலோஜினி சிவஞானம், சிறப்பு விருந்திராக நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ஶ்ரீ-4)




## குருபூர்ணிமா நிகழ்வு


(யாழ்ப்பாணம்)


ஶ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு குரு பூர்ணிமா நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வில் பஜனை, குருகீதை தொடர்பான வாசிப்பு ,குருமகத்துவம் தொடர்பான ஆன்மீக உரை ,அஞ்டாத்திர நாமார்ச்சனை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

எனவே, பக்த அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)







நாவலர் வீதியை காப்பெற் வீதியாக மாற்றும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இவ்வேலைத்திட்டத்திற்கான பெயர்ப் பலகையினை திரைநீக்கம் செய்து வைப்பதையும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார், அலுவலகச் செய்தியாளர்)

# கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி போராட்டம்

## யாழ். வ்லயக்கல்வி பணிமனை முன் திரண்டனர்



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி வலய தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்றுக் காலை 10.30மணியளவில் யாழ்.வலயக் கல்விப் பணிமனை முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இக்கவனயீர்ப்பு போராட்டத்தின் போதுதமது நிலைமையினை எடுத்து விளக்கி வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.அதில் கூறப்பட்டுள்ளதாவது, பல வகையான நெருக்கடிகளுக்குள்ளும் 10 வருடத்திற்கும் மேலாக கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றிய எமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமை வேதனையை தருகிறது.

யுத்தம் முடிவடைந்து இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்ட இன்றைய காலகட்டத்திலும் எமக்குரிய நியமனம் வழங்கப்படவில்லை என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியினால் வடக்கு மாகாணத்திற்கு என வழங்கப்பட்ட ஆயிரம் பேருக்கான நியமனத்தில் ஏனைய மாவட்டங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டபோதிலும் எமது பிரதேசத்திற்கு அது கைகூடவில்லை. அதிலும் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம்.

ஏற்கனவே 2005 ஆம் ஆண்டு வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் நடைபெற்ற இரு நேர்முக தேர்வுகளிலும் தோற்றியிருந்தோம். அத்தோடு இறுதியாக நடைபெற்ற நேர்முகத் தேர்வும் பயனளிக்காமல் போய்விட்டதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

கிளிநொச்சியில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி இந்த நியமனத்திற்கு ஒப்புதல் அளித்திருந்தார்.

அதுமட்டுமின்றி கல்வி அமைச்சர் எமது நிரந்தர நியமனம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்திருந்தார்.

எனவே வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பாடசாலைகளில் ஏற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையினை போர்ச்சூழலிலும் நிவர்த்தி செய்த எங்களின் நிரந்தர ஆசிரியர் நியமனத்தை விரைவில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டினை செய்து கொடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போராட்டத்தின் போது போரினால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு ஆசிரியர் நியமனமும் புறக்கணிப்பா? பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு முடிவு என்ன? 2005 இல் இருந்து எமக்கு நேர்முகத் தேர்வுகள் மட்டும்தானா? என்ற வாசகங்களைத் தாங்கி நின்று அமைதியான முறையில் கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ஸ்ரீ-4-6)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

வாகனத்தை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்திய குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் யாழ். பொரிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஏ.பிறேமசங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாகக் கண்டு 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்ப ளித்தார்.

★★★★★★★★★★

அனும்திப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற் றுமுன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஏ.பிறேமசங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாக கண்டு 3 ஆயிரம் அவாதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

★★★★★★★★★★

வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்ற குற்றசாட்டின் பெயரில் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்க்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஏ.பிறேமசங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாக கண்டு ஆயிரம் ரூபாய் அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

★★★★★★★★★★

கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒரு நபர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

★★★★★★★★★★

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று சப்பறத் திருவிழா

## தாயே நாகம்மா

புளியந்தீவில் பூவெடுத்து
வாயில் கௌவி
ஏழாற்று சமுத்திரத்தில்
ஏறி விழும் அலைகளிலே
மாழாது தலை தூக்கி
மலர் கொணர்ந்து நாகமதை
காப்பாற்றி! நாகதீபத்தில்
கரைசேர வந்த கப்பல்காரன்
நாகம்மாள் கோயிலை நல்கினனே.

*செ.தவமணி யா/பெரிய புலம் மகாவித்தியாலயம்.*

## அருள்வாய் அம்மையே!

வாவா நாகபூசணித் தாயே
வண்ணத்தேரில் ஏறி நீயும்!
ஆ ஆ என்றே அலறும் எங்கள்
அவலம் அறியும் அம்மை நீயே
போ போ எனவே எங்கள் துயரம்
போகச் செவ்வாய் பராபரி நீயே
தா தா உந்தன் திருவருள் எமக்குத்
தரணியில் வாழ்வு நலமுற நீயே!

*நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.*

## நயினையின் நாயகியே நல்லருள் தா

நீரலைகள் சூழவரும் நீலக் கடல் நடுவே
நிலையாக இருப்பவளே நெடிய புகழ் உடையவளே
நேரில் உனைக் காண்பதற்கும் நின்னருளைப் பெறுவதற்கும்
நித்தமலை மோதுதம்மா நின்னடியார் திருக்கூட்டம்
தேரினிலே நீயமர்ந்து திருவீதி வருங்காட்சி
உண்மையிலே சொர்க்கமம்மா உத்தமியே பூவெடுத்து
ஓரரவம் உனைத்துதிக்க உலகமெல்லாம் அதிசயிக்க
நயினையிலே உறைந்து நிற்கும் நாயகியே நமக்கருள் தா!

*சின்னையா சிவபாலன்,*
*கோண்டாவில் கிழக்கு.*

## தேரேறி வந்தே எமக்கு தரிசனம் தாருமம்மா!

அம்பிகையே முத்துமாரியம்மாஆதிபராசக்தி தாயே!
அன்ன பூரணி நீயே அகிலாண்டேஸ்வரி அன்னையே
நம்பியே உன்பாதம் நாங்கள் கை தொழுதோம்
நமக்கருள் புரிந்திட ஏன் இன்னும் தாமதமோ?
தும்பி முகனையும் தம்பி முருகனையும் பெற்றவளே
தேரேறி வந்தே எமக்கு நற்தரிசனம் தாருமம்மா!
வெம்பியழுதே நிற்கின்றோம் எம் வேதனை நீக்கிட
சித்திர தேரினிலே சிங்காரக் காட்சி தாராய்.!

*சிவநெறிக்கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்.*

## அருள் பெருக வருவாய்

பங்கமறப் பாவமற நலம் பெருக
பார்மிசை சாந்தி நிலை பெருக
செங்கதிரோன் விடியலின் வளம் பெருக
செகஜனை உயிரெல்லாம் சுகம் பெருக
பொங்க ரவம் குடை போக்க புதுமை பெருக
பூஜிக்கும் நல்லடியார் மனம் பெருக
சங்கை நிறை நயினையுறை ஈஸ்வரியே
தேரேறி வருவாயே அருள் பெருக

*அல்வாயூர் சி.சிவநேசன்*

# யாழில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

## கலாசார பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலாசார பணிப்பாளர் நாயகம் ரியில கணுகெல தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு கடந்த திங்கட்கிழமை திடீர் விஜயத்தை மேற்கொண்டு யாழ். அரச அதிபர் மற்றும் கலாசார உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது. இவ்வன்முறைகளைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு கருத்தரங்குகளை கிராமங்கள் தோறும் நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான வன்முறைகள் ஏற்படுவதை தடுப்பதே இதன் நோக்கமாகும். பெண்கள், சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானது.

அதுமட்டுமின்றி யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் என்னிடம் ஒரு கோரிக்கையும் விடுத்திருந்தார்.

அதாவது சண்டிலிப்பாய், கரவெட்டி, சங்கானை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டு வரும் கலாசார மண்டபம் அமைக்கும் பணி நிதிப்பற்றாக் குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவை ஒவ்வொன்றுக்கும் தலா 25 மில்லியன் ரூபா இன்னும் தேவைப்படுவதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்தகலாசாரமண்டபம் அமைப்பது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## இன்னிசைக் கச்சேரி

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

(ஸ்ரீ-35)

## லண்டன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் சட்ட ஆலோசனை பெறமுடிவு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எதிரான ஹெஜின் உடன்படிக்கை தொடர்பில் லண்டன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள உள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

ஸ்டான்டட் சாட்டெட் வங்கிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 162 மில்லியன் டொலர் மற்றும் அதற்கான வட்டி செலுத்தப்பட வேண்டும் என லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வங்கி மற்றும் பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்துக்கிடையில் முன்னர் ஏற்படுத்திக் கொண்ட ஹெஜின் உடன்படிக்கை தொடர் பான வழக்கு விசாரணையின் போதே லண்டன் நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்நிலையில் சட்ட ஆலோசனை பெற்றுக்கொண்டதன் பின்னர் லண்டன் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)



கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்படவுள்ள நீர்வாழ் உயிரினச் செய்கைக்குரிய அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட செயலக கணக்காளர் அருளானந்தம் பாலகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி மரியநாயகி பாலகுமார் வழங்கவுள்ளார். (ஸ்ரீ)

## வலயக்கல்வி அலுவலக கட்டடத் திறப்புவிழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கென சாவகச்சேரி கென்ஸ்மன் வீதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்திற்கான திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-29)


**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ, கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்ட நிகழ்வுகள் 13.07.2011-17.07.2011 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.**

### இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில். ரூ.) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வலி.வடக்கு பிரதேச சபை | துரித மீன் எழுச்சித்திட்டம் | 1 | சந்தைக்கட்டடத்தொகுதி, பஸ் தரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுதல் | தெல்லிப்பழை | 9.150 | அடிக்கல்நாட்டுவிழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 2 | பொன்னையா வீதி புனரமைப்பு | பன்னாலை | 5.903 | கால்கோள்விழா |
| 2 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 3 | காளி கோவில் வீதி புனரமைப்பு | ஏழாலை | 4.475 | கால்கோள்விழா |
| | | துரித மீன் எழுச்சித்திட்டம் | 4 | இராஜேஸ்வரி அம்மன் கோவில் வீதி | குப்பிளான் | 4.725 | திறப்பு விழா |
| 3 | வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 5 | ஆலங்குழாய் வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 7.529 | கால்கோள்விழா |
| 4 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 6 | சுழிபுரம் பெரிய தம்பிரான் வீதி மீள்புனரமைப்பு | சுழிபுரம் | 10.996 | கால்கோள்விழா |

### ஏனைய பிரமுகர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில். ரூ.) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வலி.வடக்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 7 | குட்டியப்புலம் மயான வீதி புனரமைப்பு | குட்டியப்புலம் | 5.789 | கால்கோள்விழா |
| 2 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 8 | மல்வம் 3 ஆம் குறுக்குத்தெரு வீதி புனரமைப்பு | உடுவில் | 4.779 | கால்கோள்விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 9 | காடக்கடம்பை மயான வீதி புனரமைப்பு | குப்பிளான் | 6.831 | கால்கோள்விழா |
| 3 | வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 10 | சேமக்காலை வீதி புனரமைப்பு | இளவாலை | 6.121 | கால்கோள்விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 11 | உச்சியோடை வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 5.362 | கால்கோள்விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 12 | சின்னப்பா வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 7.696 | கால்கோள்விழா |
| 4 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 13 | நொச்சியம்பதி பச்சந்தை வீதி புனரமைப்பு | அராலி | 13.198 | கால்கோள்விழா |

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

சி/3723




# கந்தர்மடம் அரசடி வீதி
# அருள்மிகு செல்வ நாகபூசணி அம்பாள்
# இரதோற்சவ சிறப்பு மலர் - 2011.07.14




ஓம் சக்தி போற்றி

## மஹோற்சவ பிரதமகுருவின் அருளாசிச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண மாநகரத்திலே கந்தர்மடம் பகுதியில் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றையெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றாள் அன்னை செல்வ நாகபூசணி. இவ்வாலயம் ஓர் வேண்டுதல் வழிபாட்டு தலமாகவும் அருள் வாக்கு கூறும் தலமாகவும் சிறப்பு பெற்று விளங்குகின்றது. ஆலய அமைப்பு சிறியதாக இருந்தாலும் மஹோற்சவ ஆலயங்களில் இருக்க வேண்டிய அமைப்பு முறைகளை தன்னகத்தே கொண்டிருப்பது சிறப்புமிக்க அம்சமாகும். "மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்ற தத்துவத்தை எடுத்தியம்பும் ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது. கிராமிய வழிபாட்டு முறைகளை ஒத்ததாக இவ்வாலய வழிபாடுகள் காணப்படுகின்றன. ஆலயத்திற்கு வருகின்ற அடியவர்களின் பசி போக்குவதற்காக மஹோற்சவ காலங்களில் தினமும் ஆலய அறங்காவலர்களால் அன்னதானம் வழங்கப்படுவது உயர்ந்த மானிடத்தை எடுத்தியம்புகின்றது. இவ்வாறான சிறப்புகள் ஒருங்கே அமைந்த ஆலயத்தில் இன்றையதினம் அன்னை செல்வநாகபூசணி தேரேறி வருகிறாள். இப்புண்ணிய நன்நாளிலே அன்னையை தரிசித்து எம் அறியாமை என்னும் இருள் நீக்கி ஒளி பெறுவோமாக. மேலும் அன்னையின் அடியவர்களுக்கும், உபயகாரர் களுக்கும், ஆலய அறங்காவலர்களுக்கும் தொண்டர்களுக்கும் அன்னையின் அருளாசி கிடைக்க செல்வநாகபூசணி அம்மையை பிரார்த்தித்து அருளாசி கூறுகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
சிவாச்சார்ய இளவசுபமஸ்ஜதி சிரிஜா வியாசர்
சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதமகுரு.



கல்வியும் தனமும் கடமையிற் கருத்தும்
வல்வினைநோய் வலியற்ற வாழ்வுந் தந்து
நல்வழியே நாம் நடந்து நாளெல்லாம் தொழுதிடவே
செல்வ நாகபூசணித் தாயே சரணம்
அம்மா சரணம்.

## வரம் கேட்டு வந்தவர்களுக்கு வாழ்வளிப்பவள்



கந்தர்மடம் அருள்மிகு செல்வநாகபூசணி அம்மனின் இரதோற்சவ பெருவிழாவினைப் பார்த்து பரவசம் அடைந்து பாவங்கள் விலக்கிடும் பொன்நாள் இன்றாகும்.

எம் குலத்தாயின் பெருமைகள் எண்ணில் அடங்காதவை. கந்தர்மடம் செல்வநாகபூசணி அம்மன் பதிக்கு வாருங்கள் நாளும் அவள் புகழ் பாடி உங்களின் கர்மவினைகளைப் போக்கிக் கொள்ளுங்கள்.

அம்மன் வரம் கேட்டு வந்தவர்களுக்கு எல்லாம் வாழ் வளித்து வையகத்தில் சீரும் சிறப்புமாக வாழ அருள்புரிந்து கொண்டிருக்கிறாள்.

இன்று அம்மன் சித்திரத்தேரேறி, சிரித்த முகத்துடனே தன்னை நாடி வந்த அடியவர்களின் குறைகளை தீர்க்க தேரேறி வருகின்றாள். இப் பொன்நாளிலே நாம் அன்னையின் சித்திரத் தேரினை "அரோகரா" கோசத்துடன் வடம் பிடித்து இடம் பிடித்திடுவோம்.

செல்வநாகபூசணி அம்மனின் சக்தியை உணர்ந்து கொண்டு சகல சௌபாக்கியங்களையும் பெற்று உய்வீர்களாக!

ஆலய அருள்வாக்கு அளிப்பவர்
இரா.பாலகிருஸ்ணன்

## இடர்போக்கிடும் அம்பாள் அழகிய இரதத்திலே ...

அம்பிகை அடியார்களே!

இலங்கை தீவகமதில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழவளமணித் திருநாட்டின் யாழ்ப்பாண நன்நகரின் அரசடி வீதி கந்தர்மடத்தில் கோவில் கொண்டு அருள்பாலித்து வரும் அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் சித்திரத்தேர் மீது ஆரோகணிக்கும் பொன்னான திருநாள் இன்றாகும். வழிபடும் அடியார்களின் துன்பங்களைக் களைந்து இடர் போக்கும் அம்பாள் அழகிய இரதத்திலே அலங்காரமாக ஆரோ கணித்து அருள்பாலிக்க எழுந்தருளும் இந்நாளில் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டிப் பிரார்த்தனை செய்து உளமார வாழவும் அமைதியும், இன்பமும் நிலவவும் இனிய வாழ்வு மலர வேண்டும் என்று அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் அருள்பாலித்து அருள்வாள் என்றும் அருளாசி வழங்குவாள் என்று வாழ்த்துவோம்.

வாழ்க வளமுடன்
ஓம் சக்தி

ஆலய ஆதீன தர்மகர்த்தா
கு.ஜயந்தன்

# இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்தை
# அமெ.காங்கிரஸ் மண்டப்தில் வெளியிட ஏற்பாடு

பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்த இலங்கையின் கொலைக் களம் ஆவணப்படம் நாளை வெள்ளிக் கிழமை அமெரிக்க காங்கிரஸ் மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளதாக செய்திகள் வெளி யாகியுள்ளன.

நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ள இக்காட்சியைத் தொடர்ந்து இலங் கைப் போர்க்குற்றங்கள் தொடர்பான விவாத மொன்றும் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சர்வதேச மன் னிப்புச்சபை, சர்வதேச மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச நெருக்கடிக ளுக்கான அமைப்பு என்பன இணைந்து மேற்கொண்டுள்ளன.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரும் மனித உரிமைகள் அமைப்பின் இணைத் தலைவருமான ஜிம் மக்கோவன் இக்கா ணொளி பற்றிய அறிமுக உரையை நிகழ்த்த வுள்ளார். காணொளியைத் தொடர்ந்து இடம் பெறும் விவாதத்தில் ஐ.நா. நிபுணர்குழுவின் போர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் அமெரிக் காவின் கருத்துக்கள் உட்பட இலங்கையின் பதில் கூறும் விடயத்தில் தற்போது மேற்கொள் ளப்பட்டு வரும் முயற்சிகள் தொடர்பாக கருத் துப் பரிமாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

இக்காணொளியானது 2009 ஆம் ஆண்டு வன்னியுத்தத்தின் போது இலங்கை இராணுவத் தால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கெதிரான குற்றங்கள் தொடர் பான நேரடி காட்சிப் பதிவுகளையும் நேரடி சாட்சி யங்களையும் கொண்டு பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியால் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் இக்காணொளி பிரித்தானியாவில் பொதுமக்களின் பார்வைக்கு முதன் முறையாக வெளியிடப்பட்ட போது பொது மக்கள், அரசியல் வாதிகள் மற்றும் ஊடகங்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளை எழுப்பியிருந்தது.

மேலும் ஜெனீவாவிலும் நியூயோர்க்கிலும் உள்ள ஐ.நா. அவையில் இக்காணொளி வெளி யானபோது இலங்கைப் படைகளால் மேற்கொள் ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற குரல் கள் சர்வதேச அரங்கில் மீண்டும் எதிரொலிக் கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை வடமேற்கு ஸ்ரீ விசு வேச விநாயகராலய மூலமூர்த்தி பரிவார மூர்த்திகள் மீது பாடப்பட்ட ஊஞ்சற் பாக்கள், போற்றிப் பாமாலை ஆகியவை அடங்கிய தொகுப்பு நூலான **ஸ்ரீவிசுவேச விநாயகர் தல இலக்கியங்கள்** எனும் நூல் வெளியிடப் படவுள்ளது.

மேற்படி நூல் வெளியீடு இவ்வாலயத்தின் தேர்த்திருவிழாவான இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நிர்வாக தலைவரும் பொறியியலாளருமான பூ.சிவனேசன் தலை மையில் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது நூலின் தொகுப்பா சிரியர்களான யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.கணேசலிங்கம், செல்வி கர்ணிகா ஆகி யோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நூல் வெளியீடு ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் அமரர் தணி காசலம் பத்மநாதனின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# ராஜீவ விஜேசிங்கவின் கருத்து தொடர்பில்
# நல்லிணக்க ஆணைக்குழு அதிருப்தி

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ராஜீவ விஜேசிங் கவின் கருத்து தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அதிருப்தி வெளி யிட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க அண்மையில் சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

தற்போதைய வேகத்தை விடவும் அதிக வேகத்தில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பணிகளை மேற்கொள்ள வாய்ப்பிருப்பதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

மற்றுமொரு இடைக்கால அறிக்கையை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சமர்ப்பித்திருக்க வேண்டும் எனவும் ஆணைக் குழுவின் நடவடிக்கைகளில் தலையீடு செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து தொடர் பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக உண்மை யைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையில் சுயாதீன மான முறையில் ஆணைக்குழு பணிகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கப் பேச்சாளர் ஒருவரினால் வெளியிடப்பட்ட கருத்து வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் சுட் டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# இந்தோனேசியாவில் பிடிபட்ட
# கப்பல் கனடாவை நோக்கியே வந்தது

## கனேடிய குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைத் தமிழ் அகதிகள் 87 பேருடன் சென்றுகொண்டிருந்த போது இந்தோனேசிய எல்லைப் பாதுகாப்புப் படையினரால் கைப்பற் றப்பட்ட கப்பல் கன்டாவை நோக்கியே வந்த தாக கனேடியக் குடிவரவு அமைச்சரான ஜேசன் கெனி தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகளுடன் சென்ற எம்.வி. அலிசியா என்ற குறித்த கப்பல் கடந்த சனிக் கிழமையன்று இந்தோனேசிய எல்லைப் பாதுகாப்பு படையினரால் இந்தோனேசியக் கடற்பரப்பில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டது.


கப்பலில் இருந்த அகதிகள் நியூசிலாந்து அகதி அந்தஸ்து கொடுத்து தங்களை ஏற்க வேண்டுமெனக் கூறி கப்பலில் இருந்து இற ங்க மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


இந்த விடயம் குறித்து கனேடியக் குடி வரவு அமைச்சரான ஜேசன் கெனி தெரிவிக் கையில், எம்.வி. அலிசியா என்ற குறித்த கப்பல் கனடாவை நோக்கி வரவே திட்டமிட்டிருந்தது. இல ங்கைத் தமிழர்களின் அகதி அந்தஸ்து கோரும் இலகுவான இலக்காக கனடா காண ப்படுகின்றது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான




# இரதோற்சவ சிறப்பு மலர்-2011





## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம், கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் இன்று இரதோற்சவம். உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான உமையவள் இந்த இருபாலை கட்டப்பிராய்ப் பதியிலே ஸ்ரீ முத்துமாரியம்மன் அம்சமாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.

அன்னைக்கு அன்னையாகத் தாய்க்குத் தாயாக விளங்குகின்ற அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் சகல ஜீவராசிகளுக்கும் அருள்மாரி பெய்கின்ற அற்புதமான தெய்வமாவாள். இந்த கட்டப்பிராய் வாழ் மக்கள் அனைவரும் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்தவர் களாவர். இன்று தேரேறி வருகின்ற அம்மன் வழிபடும் அடியார் பெரு மக்கள் அனைவருக்கும் அருட்காட்சி நல்குவதோடு எல்லோரும் மங்களகரமான, சுபீட்சமான, மகிழ்ச்சியான நல்வாழ்வு வாழ திருவருட் கடாட்சம் வழங்கியருள வேண்டுமென நல்லைக் குரு மணியின் பாதங்களை வழுத்தி உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்குவதில் பேருவகையடைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக சம்பந்த பரமா சார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## ஆசிச் செய்தி




இவ்வுலகம் முழுவதும் ஒரு சக்தியின் ஆற்றலால் இயங்குகின் றது. அச்சக்தியை பரம்பொருளை பெண்ணாகவும் பராசக்தியாகவும் வழிபடுவதும் நம் இந்து மதம் அச்சக்தி வடிவத்தின் ஒன்றாக முத்து மாரியம்மன் நாமம் கொண்டு இந்துமத பெருமைகள் சேர் யாழ்.இருபாலை கட்டைப்பிராய் எனும் பதியில் கோயில் கொண்டு தன்னை நாடி வரும் அடியார்களது இன்னல்களை தீர்த்து அருள் பாலித்து வருகிறாள்.

இன்றைய தினம் இரதோற்சவத்திற்கு அடியார்கள் ஆசாரத்துடனும் மனத்தூய்மை யுடனும் ஆலயத்திற்கு சென்று சரியைத் தொண்டில் ஈடுபட்டு மனதில் தோன்றும் தீய எண்ணங்களை நீக்கி தேவியின் அருட்கடாச்சத்தைப் பெற்றுய்யுமாறு ஆசீர்வதிப்பதுடன் இன்று எமது ஆலய பரிபாலனசபை செயலாளர் திருவாளர் தி.ரவீந்திரநாதன் ஆசிரியர் அவர்களினால் வாராந்த தோத்திரத்திரட்டு என்னும் நூல் இன்று தொகுத்து வெளியிடப்பட வுள்ளது.

இந்நூல் ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்யக் கூடிய வகையில் தொகுக்கப்பட்டுள்ளது. இந் நூலை ஒவ்வொரு அடியவரும் பெற்று இல்லத்தில் நாளாந்த பாராயணம் செய்வதன் மூலம் எல்லாம் வல்ல முத்துமாரியின் அருட்கடாச்சம் கிடைக்க ஆசீர்வதிக்கின்றேன்.

மகோற்சவ குரு பிரம்மஸ்ரீ சிவாகம சிரோன்மணி
பொ.வரதராஜக் குருக்கள்.

## துன்பங்கள் நீக்கும் முத்துமாரி அம்மன்



*கட்டைப்பிராய்தனிலே கருணை உளம் கொண்டிலங்கி*
*திட்டமுடன் வீற்றிருக்கும் தேவி-இட்டமுடன்*
*வேண்டுவார் வினைதீர்க்கும் வீரமுள்ள தாயே*
*யாண்டும் எமைக் காப்பாய் நீ!*

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர்வாக்கு. இவ்வாக்குப்படி எமது கட்டைப்பிராயில் எல்லாம்வல்ல முத்துமாரி அம்பாள் கோயில் கொண்டருளியுள்ளார். ஏனைய ஆலயங்கள் போல இக்கோயிலும் மிகவும் சிறியதாக இருந்தது. இக்காலத்தில் இவ்வூரைச் சேர்ந்த ஒரு மூதாட்டி கூட்டி, மெழுகி, மலர்கள் சூட்டி, திருவிழாக்கேற்றி பராமரித்து வந்தார்.

பின்பு இவர் வழிவந்த அமரர் திரு.க.கணபதிப்பிள்ளை ஆசிரியர் தொண்டு செய்யத் தொடங்கினார். இவரின் வழிகாட்டலில் பரிபாலனசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இச்சபையின் அயராமுயற்சியால் அம்பிகை அடியார்களின் ஒத்துழைப்போடு கோயில் விஸ்தரிக்கப்பட்டு இன்று பொலிவோடு, சகலவளங்களுடனும் தலைநிமிர்ந்து காட்சி அளிக்கிறது.

1966 ஆம் ஆண்டு அம்பாளின் பக்தர் ஒருவர், மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்துக் கொடுத்தார். அம்பாளுக்கு தொடர்ந்து அலங்காரத் திருவிழாக்களும், விசேட தினங்களில் பூசையும் நித்திய பூசையும் நடைபெற்றன. 1983 இல் மஹோற்சவங்கள் ஆரம்பமானது. இவ்வாண்டிலேயே சித்திரத் தேரும் தேர் இருப்பிடமும் கட்டப்பட்டது.பின் திருமஞ்சமும் மஞ்சத்தரிப்பிடமும் அமைக்கப்பட்டது. பின் உள்வீதி அமைக்கப்பட்டு சுற்றுப்பிரகார மூர்த்திகளுக்கும் தலம் அமைக்கப்பட்டது. வசந்தமண்டபமும் புதுப்பிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டில் ஒரு கல்யாண மண்டபம் கட்டுவதற்கு திட்டமிட்டு, உள்ளூர், வெளிநாட்டில் உள்ள அம்பாள் அடியார்களின் உதவியுடன் 5.06.2005இல் பூர்த்தியாகி திறப்பு விழாவும் கொண்டாடப்பட்டது.

இப்படி வளர்ச்சியடைந்து வரும் எமது முத்துமாரி அம்பாளின் கோயிலுக்கு ஐந்து தள கோபுரம் அமைப்பதற்கு திருவுளம் கொண்டுள்ளோம். எமது தாயின் அருளால் இத்திட்டம் நிறைவுற, அம்பாள் அடியார்கள் எங்கிருந்தாலும் தோள் கொடுத்து தூண் போல் தாங்கி கட்டி முடிக்க தம்மாலான உதவிகளை வாரி வழங்க வேண்டும் என அம்பாள் சார்பாகவும் பரிபாலனசபை சார்பாகவும் அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கா. தவராசா, தலைவர், கட்டைப்பிராய் முத்துமாரியம்பாள்,
பரிபாலனசபை.

## அம்பிகையில் நம்பிக்கை வைப்போம்




நம்பினார் கெடுவதில்லை. அம்பிகையில் நம்பிக்கை வைத்தோர் எல்லோரும் நல்லநிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று தேரேறி அருள்பாலிக்கும் இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் வடம் பிடித்து வேண்டுவதை வேண்டுவதற்கு எல்லோரும் வாரீர்.

கட்டப்பிராய் எனும் இக் கிராமத்திலே அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் முத்துமாரியம்பாள் அன்னை நம்பியவர்களை நல்ல நிலையில் வைத்துக் கொண்டிருக்கும் அம்பாள் சிறந்ததோர் கிராமமாக நல்லதோர் சமூகமாக கட்டப்பிராயையும் அயல் கிராமங்களையும் நிச்சயித்துக் கொண்டிருக்கும் அம்பாள் இன்று தேரேறி அடியார்களுக்கு அருள்பாலிக்க வருகிறாள். எல்லோரும் வாருங்கள் வடம் பிடித்து வரம் பெறுவோம்.

சி.இலட்சுமி காந்தன் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்),
பொருளாளர், முத்துமாரியம்மன் பரிபாலனசபை.

## முன்னின்று சுரக்கும் இன்னருள் தெய்வம் எங்கள் முத்துமாரி



யாழ்ப்பாணத்தின் கண் அமைந்திருக்கும் கட்டப்பிராய்தனில் எழுந்தருளி அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் இரதோற்சவ விழா பக்தி பூர்வமாக நடைபெறுகின்ற இன்றைய தினம் இரதோற்சவ சிறப்பு மலர் வெளிவருவது சாலப்பொருத்தமானதாகும்.

அதுமட்டுமில்லாது அடியேனினால் தொகுக்கப்பட்ட "வாராந்த தோத்திரத் திரட்டு" எனும் நூல் ஆலயமுன்றலில் வெளியிடப்படுவது சிறப்பம்சமாகும்.

பிரமம் ஒன்றே என்பதனை வேதம் சொல்கின்றது. எனவே எங்கும் பிரமமாய் சோதிப் பொருளாய் ஈறில்லா பதங்கள் யாவையும் கடந்து நின்றாளும் சக்தி நமக்கு முன்னின்று சுரக்கும் இன்னருள் தெய்வமாய் பால் நினைந்தூட்டும் தாயாக திகழ்பவள் சக்தியே. ஆதிபராசக்தியானவள் பற்பல தெய்வ வடிவங்களில் தோன்றி திரு நாமங்கள் பலவும் பூண்டு திருவிளையாடல்கள் புரிந்து நம்பிக்கை ஊற்றாகி நன்மையளிக்கின்றாள். புவனத்தை காக்கும் பூரணியாக சார்ந்தார்க் கருளும் சங்கவியாக வைதாரையும் வாழவைத்து ஆறுதல் ஈய்ந்து அருட்புனலால் ஆற்றுப்படுத்தும் அம்பிகை எங்கள் முத்து மாரி.

இவ்வாலய மஹோற்சவ காலங்களில் இவ்வாலய சூழவுள்ள இளைஞர்கள், யுவதிகள், சிறார்கள், வயோதிபர்கள் என்ற வயது வேறுபாடு இன்றி தொண்டாற்றுவதுடன் மட்டுமில்லாது அயலூர் அடியவர்கள், வெளிநாட்டிலிருந்து வருகை தந்த அம்பாள் அடியவர்கள் அனைவரும் மஹோற்சவம் பக்தி பூர்வமாக நடைபெற பூர்ண ஒத்துழைப்பு வழங்குவது காணக்கூடியதாகவுள்ளது.

மஹோற்சவ காலங்களில் நாளாந்தம் மகேஸ்வர பூஜை என அழைக்கப்படும் அன்னதானம் சிறப்பாக இடம்பெறுகின்றது. அம்பாளின் திருத்தொண்டினை சிறப்பாக செய்து வரும் இளைஞர் குழாத்தினால் தாகசாந்தி நிலையம் அமைத்து தாகம் தீர்க்கும் பானங்கள் வழங்கப்படுகின்றது.

சமய அறிவுப்போட்டி ஒவ்வொரு ஆண்டும் நடாத்தப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் பரிபாலன சபையினரால் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பார்கள். அந்த வகையில் எமது ஆலயத்தில் ஐந்துளதள இராஜ கோபுர வேலைகள் ஆரம்பமாகவுள்ளது. எனவே இவ் பெரும்பணி நிறைவேற அம்பாளின் அடியவர்களாகிய ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளை வாரி வழங்கி அன்னை முத்துமாரியின் அருட்கடாச்சத்தை பெறுவீர்களாக.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

தி. ரவீந்திரநாதன் (ஆசிரியர்)
செயலாளர், ஸ்ரீமுத்துமாரி அம்மன்
பரிபாலன சபை.

**மலராக்கம்:-**
**திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன்**
ஆசிரியர், யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.

AMT
TRANSPORT SERVICE
POINTPEDRO ROAD, IRUPALAI JUNCTION, KOPAY.
T.P.:021 223 0397

றூபா பன்முக வர்த்தகம்
இல.104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8330

mangala
Office & Home Furnicters
MANGALA SHOW ROOM
536, K.K.S. Road, Jaffna. 021 222 8367
mangakashowroom@gmail.com
Authorized dealers for

வராகி களஞ்சியம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே : 021 4920798

கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 2833
Fax: 021 222 2368

இரட்டைச் சங்கு மார்க் பப்படம்
DOUBLE SANGU MARK PAPPADAM

DHL
உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான
துரித கடிதங்கள் பொதிகள் சேவை
வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்
London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900
220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக
திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.
DHL Online Tracking



TCN Express,
2B,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835
குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம்நெற்
இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18.பிரதானவீதி.நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி.கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

17

## பல்வகைகள் ஒன்று சேர்தல்

## [Assemblage of Multiplicity]

இதில் மையமே ஆட்சி அதிகாரத்தை யும், பண்பாட்டு அதிரகாரத்தையும் கொண்டிருந்தது. முழுத்தமிழரின் வரலாறும், பண்பாடும்; மையத்தின் வரலாறும் பண்பாடாகவுமே கட்ட மைக்கப்பட்டது. விளிம்பில் வாழ்ந்த



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்

தமிழரின் வரலாறும் பண்பாடும் கவனிக்கப்படவேயில்லை.

19ஆம் நூற்றாண்டின் பின்னரான தமிழ்க்கலை, இலக்கியச் செந் நெறிகள் பற்றிய கட்டமைப்பில் நாம் முன்னர் கூறியபடி ஆனந்தகுமார சாமி அறிமுகம் செய்த சிற்ப, ஓவிய, இசை, இலக்கிய மரபுகளும்; சுவாமி விபுலானந்தரும் ஏனையோ ரும் கூறிய தமிழ் செந்செறி இலக்கி யமரபுகளும்; பண் இசையும் மையம் சார்ந்தனவாகின. 1960 களில் எழுந்த இடதுசாரிச் சிந்தனைகளையும் கைலா சபதி, சிவத்தம்பி, கிருஷ்ணராசா, மார்க் ஆகியோரின் கலை, இலக்கியப் போக் குகளையும் நாம் இடைநிலை சார்ந் தன எனலாம். இவர்கள் முன் வைத்த கலை, இலக்கியக்கோட்பாடுகளும் மையப்பண்பாட்டோடு ஓரளவு சேர்க்கப்பட்டும் முரண்பட்டும் நின்றன.

ஆனைக்குட்டி, செல்லையா அண்ணாவியார், கோடாலி கண் ணப்பர், டானியல் ஆகியோரை நாம் விளிம்பு சார்ந்தவர் எனலாம். இவர்க ளையே, இவர்கள் வளர்த்த கலைக ளையோ மையம் கண்டு கொள்ள வேயில்லை. முழு இலங்கைத் தமிழரினதும் கலைகளாகவும், இலக் கியங்களாகவும் மையம் சார்ந்த கலைகளும், இலக்கியங்களுமே கொள் ளப்பட்டன.

பரதம், கர்நாடக சங்கீதம், சமஸ் கிருத மயமாக்கம் கொண்ட கோயிற் பண்பாடுகள். செந்நெறி இலக்கியக் கற்கை நெறிகளே ஈழத்தமிழ் பண்பாடு என கட்டமைக்கப்பட்டன .காரணம்; அதிகாரம்; அறிவுமையத்திடம் இருந் தமையே. மையம் ஒரு கூறே தவிர முழுமையன்று.

மையம் என்பது ஒன்றல்ல. அது பல எனச் சில பின் நவீனத்துவவாதிகள் வாதிட்டனர். மையமே விளிம்பாக வும், விளிம்பு மையமாகவும் மாறும் இய ங்கு நிலையும் உள்ளதென்று நிறுவினர். வையமூப்பன் ஆனைக்குட்டி கட்ட



சோ. கிருஷ்ணராஜா

**19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந் தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்**

மைப்பில் விளிம்பு நிலைசார்ந் தவராயினும்; கிராமத்தில் அவரும், அவரது கோயிலும் பண்பாட்டு மையம் தான். அம்மக்கள் மத்தியில் அவர் மிக மிகப் பெரியகலைஞர்தான். அதிகா ரம் மிக்கவர்தான். எனவே இக்கோட் பாட்டின் அடிப்படையில் மையம், விளிம்பு, இடைநிலை எனப்பிரித்துப் பார்ப்பதனால் விடயத்தைபுரிந்து கொள்ள இக்கோட்பாடு உதவுவது உண்மையாயினும், விளிம்பு குறைவு. மையம் உயர்வு என்று இக்கோட்பாடு கூறுவது பொருந்தாமலாகின்றது.

டிலியூஸினதும், கட்டாரியினதும் றிசோம் கோட்பாடு

டிலியூஸ், கட்டாரி இருவரும் பின் நவீனத்துவ சிந்தனையாளர்கள். டிலியூஸ்; தெரிதாவின் மாணவர். கட்டாரி; லக்கானின் மாணவர். மெய்யியற்றுறை அறிஞர் களான இவர்களை வைத்த ஒரு கோட்பாடே றிசோம் என்ற கோட் பாடாகும். இதனை நாம் குறுக்கு மறுக்கு என அழைக்கலாம்.

றிசோம் என்ற வார்த்தைக்கு நேரான தமிழ்சொல் கிழக்கு போன்ற என்று பொருள் தரும். எலிவளை போன்ற விடயங்களும், றிசோம் என்ற சொல் லைக் கட்டாரி பயன்படுத்துகின்றார்.

குறுக்கு மறுக்கு என்பது பூமிக்கு க் கீழ்வாழும் தண்டு, வேர் மற்றும் வேரை உருவாக்கும் கரு போன்ற வற்றிலிருந்து வித்தியாசமானது. வட்டமான பூண்டு போன்ற உறுப்புக ளும்; கிழங்கு போன்ற முடிச்சுகளும்; குறுக்கு மறுக்கான வேர்கள் கொண்டவை யாகும். வேரையும், வேரை உருவாக் கும் கருவையும் தன்னுட் கொண் டுள்ள செடிகள் கூட குறுக்கு மறுக்குத்தன்மை கொண்டனவையே. (தொடரும்)

# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

07


07. யன்னலில் கூடு வைத்து நுள ம்பு களைப் பிடித்துப் பரிசோதனை;-

பூச்சிக்கொல்லி விசிறப்பட்ட ஒரு பிரதேசத்திலுள்ள வீடுகளின் யன்னல்களில் கூடுகள் மாலை ஆறு மணிக்கு வைத்து அதிகாலை 6 மணிக்கு பரிசோதிப்பதன் மூலம் கூட்டினுள் பிடிக்கப்பட்டுள்ள நுளம் பின் வயிற்றின் இரத்தம் முற்றும் முட்டை விருத்தியை பரிசோதிப்ப தன் மூலம் நுளம்பின் உணவு, வெளியில் தங்கும் பழக்கவழக்கங் களை நிர்ணயிக்கக் கூடியதாகும். நுளம்புகள் வீட்டிற்கு வெளியில் தங்கும் பழக்கவழக்கத்திற்கும் தள்ளப்படுகின்றனவா என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

08. நுளம்பின் இரத்தத்தை பரிசோதித்து மனித இரத்தக் குறி யீட்டைக் கணக்கிடல்;-

இலங்கையில் 35வீதமான அனோபிலிஸ், கியூலிசிபேசிஸ் நுளம் புகளே மனிதனில் இரத்தம் குடிப் பன என்று கணக்கிடப்பட்டது. இப்பரிசோதனை மூலமே நுளம் பின் இரத்தத்தை ஒரு வட்டமான ஒற்றுத்தாளில் 16ஆகப்பிரிக்கப்பட்ட பகுதியில் ஒரே நேரத்தில் ஒரு கிரா மத்தில் ஒரு குறிப்பிட்ட எண் ணிக்கையளவை எடுத்துப் பரிசோ தித்தல்

உ+ம் 100 வரும் வரை இப்பரி சோதனையைச் செய்வதன் மூலம்




இதன் விழுக்காட்டை கணக்கிடலாம். ஒரு நுளம்பு ஒரே நேரத்தில் தன்ன ளவான குருதியை மட்டும் உறிஞ்சி உணவாக்கும் என்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நுளம்பு உற்பத்தியாகும் இடத்திலு ருந்து முதன் முதலில் ஆண் நுளம்பு வெளிவரும். அதன் பின்பே பெண் நுளம்பு வெளிவரும். பெண்நுளம் பின் வாழ்க்கையில் அது ஒரு முறையே உற்பத்தியிலிருந்து வெளி வந்த 24 மணித்தியாலயத்தின் பின்பு ஆண் நுளம்புடன் இன விருத்திக்காக புணர்ச்சியில் ஈடுபடும். அதன் பின்பே இரத்தம் குடிக்கப் புறப்படும். அப்போதும் அது குடிக்கும் முதற் குருதி உணவு உடல் விருத்திக்கு மட்டுமே பயன்படும். இரண்டாவது அல்லது மூன்றாவது குருதி உணவே முட்டை விருத்திக்கு உதவும்.

01. நோய்க்காரணிகள்:-

1. மலேரியாவை பிளாஸ்மோடியம் என்னும் வர்க்கத்தை சார்ந்த பல்சிப் பாரம் வைவாக்ஸ் மலேரியா ஓவாலே என்னும் நான்கு ஒட்டுண்ணிகளை அனோப்பிலிஸ் பரப்புகின்றது.

கியூலிசிபேசிஸ் என்னும் நுளம்பு வன்னியில் Pf.P.V ஆகிய இரு ஒட்டு ண்ணி களைப் பரப்புகின்றது. இதில்

**Dr ம.இராசதுரை.
இம்பர் சிட்டி.
பருத்தித்துறை.**

நுளம்பினுள் ஒரு வட்டமும் மனித னுள் இன்னொரு வட்டமும் இடம் பெறுகின்றது. நோய்பரப்பும் காலம் 12 நாட்கள் மலேரியாக் காய்ச்சல் ஆரம் பத்தில் ஒன்றை விட்டு ஒருநாள் காய்ச்சல். $103^{0}$ F உஷ்ணத்திற்கு ஏறிச் காய்ந்து விட்டு விட்டு வியக்கும். இத னால் இது அதிகமான வன்னிப் பிர தேசத்தில் உள்ள மக்களைத் தாக் குவதனால் காட்டுச் காய்ச்சல் என்றும் அழைக்கப்பட்டது. (தொடரும்)

# கொழும்பைப் பொறுப்புக்கூற வைப்பது சர்வதேச நாடுகளின் கடமை

## கலும் மக்ரே வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது சர்வதேச போர் நியமங்களுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்தை பொறுப்புக் கூற வைக்க வேண்டியது உலக நாடுகளின் கடமை என இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படத்தின் இயக்குநர் வலியுறுத்தியுள்ளார்.

இதனை உலக நாடுகள் செய்யத் தவறினால் இத்தகைய போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் உலக வரலாற்றில் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் வெளியிட்ட எச்சரிக்கையை இலங்கை அரசாங்கம் தீவிர கவனத்தில் எடுக்கும் என நான் நம்புகிறேன்.

இப்போரின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமைச் சட்டங்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுத்து இச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன்னிறுத்தப்பட வேண்டும் என அமெரிக்காவும் பிரித்தானியாவும் வலியுறுத்தியிருந்தன. அத்துடன் அரசாங்கம் சுயாதீனமானதும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ற வகையிலும் விசாரணைகளை முன்னெடுக்காது விட்டால் இவ் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டியது தவிர்க்கமுடியாது என இவ்விரு நாடுகளும் எச்சரித்திருந்தன.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரை நம்பத்தகுந்ததும் காத்திரமானதுமான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

அதேவேளை இவ்விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள இலங்கை அரசாங்கம் இப்போரின் போது பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என தொடர்ச்சியாக கூறி வருகின்றது.

அதேபோன்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவும் இத்தகைய விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. இவ்விசாரணைகளை முன்னெடுப்பதற்குரிய சர்வதேச நியமங்களை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு கொண்டிருக்கவும் இல்லை என்றார். (ஏ)

# நடமாடும் சேவைகள் பிற்போடப்பட்டன

(கொழும்பு)

வடபகுதி மக்களுக்கு கொன்சூலர் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நடத்தப்படவிருந்த இரண்டு நடமாடும் சேவைகள் பிற்போடப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அலுவலகத்திலும் இன்று முல்லைத்தீவு அரச அதிபர் அலுவலகத்திலும் நடத்தப்படவிருந்த இந்த நடமாடும் சேவைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகிறது.

இந்த நடமாடும் சேவைகள் மீண்டும் நடத்தப்படும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சு தெரிவிக்கிறது.(ஏ)

# அரசியல் யாப்பு திருத்தத்தின் ஊடாக மக்கள் சபைத்திட்டம் விரைவில் நடைமுறை

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)



அரசியல் யாப்பு திருத்தத்தின் ஊடாக மக்கள் சபை திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த மக்கள் சபைத் திட்டம் நாட்டில் ஏற்படுத்தப்படும் நிரந்தர சமாதானத்தின் பகுதியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வ[illegible] செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த மக்கள் சபைத் திட்டம் இந்தியாவின் பஞ்ச[illegible]து முறை போன்று இருக்கும் எனவும் அதற்கு மேல் உள்ளூராட்சி சபைகள்–மாகாண சபைகள்– நாடாளுமன்றம் என அரசியல திகார கட்டமைப்புக்கள் செயற்படும் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வன்னியில் மீள்குடியேறியோருக்கு சேவா லங்கா நிறுவனம் உதவி

வன்னியில் மீள்குடியேறிய மக்களுக்கு உடனடி உணவு மற்றும் பாதுகாப்பு வாழ்வாதார உதவி திட்டத்தை சேவா லங்கா நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக பளை பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான இந்த உதவித் திட்டம் காசுக்கான வேலைத்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மீள்குடியேறிய பகுதிகளில் இனங்காணப்பட்ட வீதிகளை புனரமைத்தல், சிறு குளங்களையும் வாய்க்கால்களையும் ஆழப்படுத்துதல் போன்ற பல வேலைகள் கிராமங்களில் உள்ள மக்களின் மூலம் செய்யப்படுகின்றன. (ஸ்ரீ-2)

# வாகன இலக்கத்தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகளின் (Northern Province)ஒரு தொகுதி கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றின் உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி, அதன் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத்தகடுகள்,(பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகிய ஆவணங்களுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கிடைக்கப் பெற்ற வாகன இலக்கங்கள் வருமாறு,

GU-9222, QT-9884, QK-9974, RB-3545, JO-0269, UT-6387, TS-8063, GW-4128, QD-0305, JM-2543, QH-3773, GQ-8947, RA-0151,TP-1909, HH-3968, JL-1485,QF-6768, JD-3355,QC-3090- HW-9787, RS-1563, JH-2679, TF-4279, MT-4703, HG-2081, QI-9738,QK-0919, GC-1816, JP-0458, JA-7770, GZ-6776, MR-9526,QD-0462, JB-1538, QJ-4572, GC-8922, JJ-0983, MX-3043, RA-2551, GD-0647, JW-1357, GS-0576, HB-7835, RA-4116, RA-3999, MT-9233, RB-2228, GX-6178,QF-9473,GH-7754, UM-2381, JI-5435,HV-3048, TA-4869, GX-4339, GN-0014,JJ-1102, PA-7912, MH-5307, GJ-3195, GW-7644, GZ-3043, JN-2905, RA-8172,JY-9741, GA-2837, HF-7251, JP-0120,GM-1607, JC-2105, JL-2364, HG-5464,QH-6018, QJ-9085, GJ-4910, JC-2098, MJ-8269, RA-5099, UD-3157, GM-7258. (ஏ)

# பணமோசடி சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு நபருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

பொதுமக்கள் பலரிடம் பல இலட்சம் ரூபாய் பண மோசடி செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு முக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி பிரதேசத்தில் பல பொது மக்களிடம் அடகு வைப்பதாக கூறி 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பணத்தையும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் மோசடி செய்த குற்றச்சாட்டில் மற்றொரு முக்கிய நபரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர்.


குறித்த நபரை நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இக்குற்றத்துடன் தொடர்புடைய முதலாவது முக்கிய சந்தேக நபர் ஏற்கனவே மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-24)







வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆளுநராக பதவியேற்று நேற்று முன்தினம் இரு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. இதனையொட்டி நடைபெற்ற நிகழ்வில் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திற்கு ஆளுநர் அழைத்து வரப்படுவதையும் ஆலயக் குருக்கள் ஆசி வழங்குவதையும் சாவகச்சேரியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 72 வறிய குடும்பங்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் ஆளுநர் பணிமனையில் வைத்து வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:–என்.குமார்)



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்-2011.07.14


தீவினைகள் அகல தேரேறி அருள் தா அம்மா

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

## அசோகா நகை அகம்

இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6290

நம்பிக்கை நாணயம்-உத்தரவாதம்

22 கரட் தங்க நகைகளுக்கு

**ASOKA JEWELERS**





## ஆர். வி.ஜி மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## R.V.G ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல : 021 222 6808

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்திற்கும் விஷேடமாக தயாரிக்கப்பட்டது.

## V.S.P லக் ஒயில்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0212224135, 0212229165

நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்

## J.T ரான்ஸ்போட்

யாழ் → கொழும்பு

கொழும்பு → யாழ்

சகல விதமான பொருட்களும் நியாயமான கட்டணத்தில் கொண்டு வந்து தரப்படும்




**J.T ரான்ஸ்போட்**

இல.302.ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

41 வருடகால மதிப்போடு விளங்கும்

## யாழ். வணிக நிலையம்

## Jaffna Traders

இல.336, 338, (மேல்மாடி) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குழந்தைகளின் பால்மா, பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கிறீம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்-2011.07.14

## நயினைப் பதியை நாடிவரும் அன்பர்க்கு நலம்பல நல்கிடும் நாகபூஷணித்தாய்

### மணிபல்லவத்தில் இன்று இரதோற்சவம்

ஈழத்திருநாட்டில் உள்ள புராதன சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்புத் தலமாக விளங்குவது நயினை நாகபூஷணி அம்பாளின் ஆலயமாகும். அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடமாக விளங்குகின்றது. அதுமட்டுமன்றி மூர்த்தி, தலம்,தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற திருத்தலமாகும்.

**நாகம் பூசித்த நாயகி**

நயினைப் பதியில் உறைந்தருளும் நாகபூஷணியை நாகம் பூசித்த வரலாறு அற்புதமானது. நாகபூஷணி அம்பாளுக்கு நாகபூஷணி என்ற சிறப்புத் திருநாமமுண்டு. நாகம் வழிபட்டதனால், நாகத்தால் பூசிக்கப்பட்டதனால் அம்பாளுக்கு இத்திருநாமம் அமைந்தது என்பர். இவ்வாறாக வழங்கி வரும் செவிவழிக்கதையை நோக்கும் பொழுது,

நாகமொன்று நயினாதீவுக்கு வடக்கேயுள்ள புளியந்தீவிலிருந்து நாள்தோறும் பூக்கள் கொண்டு வந்து நயினாதீவில் அம்மையை வழிபடுவதைத் தனது கடனாகக் கொண்டது. ஒருநாள் பூக்கொண்டு அதுவரும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்ல முனைந்தது. நாகம் அச்சம் அடைந்தது. கடல் நடுவில் இருந்த கல் ஒன்றில் சுற்றிக் கொண்டது. கருடனோ மற்றொரு கல்லில் அமர்ந்த வண்ணமாக நாகத்தைக் கொல்ல தருணம் பார்த்தது.

இந்நேரம் கடல்வழியாக மரக்கலம் ஒன்றிலே பண்டங்களை ஏற்றிவந்த வணிகன் ஒருவன் இக்காட்சியைக் கண்டான். பாம்பின் மீது இரக்கம் கொண்டான். "அதனைக் கொல்ல வேண்டாம்" என்று கருடனை வேண்டினான். கருடன் வணிகனைப் பார்த்து "நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து நாகேஸ்வரிக்கு கோயில் கட்டுவதாக உறுதி தந்தால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது சென்று விடுகிறேன்" என்றது. அவன் அவ்வாறே உறுதியளிக்க அது நாகத்தை கொல்லாது விலகிச் சென்றது.

வணிகனோ தனது நாடு சென்று நடந்தவற்றை தன் மனைவிக்கு உரைத்தான். இரவு நித்திரைக்குச் செல்கையில் கணவன்-மனைவி இருவரதும் கண்களைக் கூச வைக்கும் பேரொளி அவர்களின் சயன அறையில் தோன்றிற்று.அவர்களிருவரும் அவ் ஒளி எதுவாக இருக்கலாம் என அதிசயப்பட்டனர். அது விலை மதித்தற்கரிய நாகரத்தினக் கல்லிலிருந்து வந்த ஒளி என்பதைக் கண்டு கொண்டான். நாகபூஷணியின் நல்லருளை, அற்புதத்தை வியந்து நயினைதீவுக்கு வந்து அன்னைக்கு அழகியதோர் ஆலயம் அமைத்தனர்.

நயினாதீவு நாகபூஷணியின் ஆலய கருவறையின் அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப் பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்த அம்மன் உருவம் போலத் தெரிகின்றது. இதற்குப் பின்னால் ஐந்து தலை நாகப் பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்த நாகச் சிலையானது இன்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

இத்தகு வரலாற்று சிறப்புக்களைக் கொண்ட சப்த

**மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்**

தீவுகளின் நடு நாயகமாக விளங்கும் நயினாதீவில் நாகபூஷணி அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

பல்லாயிரக்கணக்கான அம்பிகையின் பக்தர்கள் தேரில் வடம்பிடிக்க மணிபல்லவ நாயகி இன்று தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்கும் காட்சியை காணக் கண்கோடி வேண்டும். அம்பிகையைச் சரண்புகுந்து அதிக வரம் பெறுவோமாக.

## தேரேறி வருவாய் நாகபூஷணித்தாயே

*நயினையின் நாயகியே நாகபூஷணித் தாயே*
*கருணைக் கடலால் எமை காத்திடுவாய் நீயே*
*தேரேறும் திருக்காட்சி காணவரும்-உந்தன்*
*புகழ்பாடும் அடியவர் தம் துயர் தீர்ப்பாய் நீயே*
*உற்ற துணையாய் நீயே இருந்துவிட்டால்*
*வேறென்ன வேண்டுமம்மா இப்புவியில்*
*நின் கதியே சரணென்று வழிபடுவோருக்கு*
*பேரின்பப் பெருவாழ்வுதனைத் தந்திடம்மா...!*

**ம.நிரோஷனா,**
**கோப்பாய் தெற்கு.**

## நீடிக்கும் நிலையீவாய்!

வாழ்வியலின் தத்து வத்தை
வளமாகவே யுணர்த்தி
தாழ்வின்றி வாழ வைக்கும்
தவ நாக பூஷணியே!
நாளெல்லாம் அலைகடல் மேல்
அணிதிரளும் உன்னடியார்
நீளுலகில் நிம் மதியாய்
நீடிக்கும் நிலை யீவாய்!

**வி.சி.குஞ்சிதபாதம்**

## தேரில்வரு வாள்நயினைத் தேவிநாயகி

ஊரெலாம் ஒருங்கு கூடியே
பாரெனப் புகழ்மணி பல்லவத்தில்
வார்முர சொலிமுகில் விலக்கத்
தேரில் வரு வாள்நயினைத் தேவிநாயகி

**சிவசண்முகவடிவேல், ஏழாலை**





# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்-2011.07.14

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் தேர்த்திருவிழா இன்றாகும். லோகமாதாவாகிய அன்னை ஸ்ரீ ஆதிபராசக்தி உமையவள் அடியார்க்கருளும் அமுதசுரபி அன்ன பூரணியாக நயினையிலே நாகபூஷணி எனும் நாமத்தோடு எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.

வருடாந்த மஹோற்சவத்திலே தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். அன்னை ஸ்ரீ நாகஷணியானவள் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் இடர்களையும் இன்னல்களையும் இல்லாதொழிப்பதற்காக இன்று நயினையம் பதித் திருவீதியிலே தேரேறிப் புறப்படுகின்றாள்.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியான அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஈழம் வாழ் மக்கள் எல்லோருக்கும் அருளை அள்ளிச் சொரிந்து அனைவரும் நல்வாழ்வு வாழ வகை செய்ய வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதபங்கஜம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

நயினை நாகபூஷணி ஓம் சக்தியே!
நாகத்தில் கொலுவிருக்கும்-நயினை ஓம் சக்தியே!
சிவத்தின் ஒரு பகுதி-நயினை ஓம் சக்தியே!
தாலிக்கும், வேலிக்கும்-நயினை ஓம் சக்தியே!
அன்புடன் கலந்திருப்பவள்-நயினை ஓம் சக்தியே!
நினைத்ததை நடத்தி முடிப்பவள்-நயினை ஓம் சக்தியே!
பார்க்க தூண்டுவதும் -நயினை ஓம் சக்தியே!
நயினா வாசலுக்கு வரவழைப்பதும்-நயினை ஓம் சக்தியே!
தேரேறி தேவார ஓசையுடன் வருவதும்-நயினை ஓம் சக்தியே!
நேர்த்தியை முடித்ததும் கண்திறப்பவள்-நயினை ஓம் சக்தியே!
சக்தியே!... சக்தியே...! சக்தியே!...
நயினை நாகபூஷணி ஓம் சக்தியே....

வீ.அன்னராசா (அருள்), கொம்மாந்தறை




பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி

நல்லூர் மாபெரும் மலிவு விற்பனை

சரவணா ரெக்ஸ்



விதம் விதமான எண்ணற்ற ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்

இடம்:- சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை (கெங்காதரன் மருத்துவமனை அருகாமை),
கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.
காலம்:- 09.07.2011 தொடக்கம் 31.07.2011 வரை நேரம்:- காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை
குறிப்பு:- ஆடித் தள்ளுபடியை முன்னிட்டு ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்.

MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து



RAMCO CEMENT

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- ★ இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- ★ 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- ★ மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ★ ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வர பகவான் அன் கம்பனி

தொ. பே: 021 222 2122, 021 222 2350
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாடிவரும் அன்பர்க்கு நல்லருள் புரிவாய் நாகபூஷணியே!

உடல் வளர்ச்சிக்கு

ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

அன்னா தயாரிப்புக்களே!

| | |
|---|---|
| அன்னா கோப்பி | அன்னா மிளகாய்த் தூள் வகைகள் |
| அன்னா அரிசி மா | அன்னா பத்தி வகைகள் |
| குரக்கன் மா | அன்னா பற்பொடி |
| ஆட்டா மா | அன்னா இனிப்பு வகைகள் |

அன்னா தொழிலகம் இணுவில்

தொலைபேசி இல: 021 222 3565

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்-2011.07.14


## தட்ஷா

### அழகுக் கலையகமும் பயிற்சி நிலையமும்



மணப்பெண் அலங்காரம்
மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள்
அனைத்துவகையான முக ஒப்பனைகள்
சிறுவர், மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ்
மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts)
பேர்மிங் (Perming), ஸ்ரெயிற்னிங் (Straightening)
றீ-பொண்டிங் (Re-Bonding) & கலரிங் (Colouring)

**Special Bridal Packages & Wedding packages are Available**

இல. 84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9713, 077 33 83643 E-Mail: thadsha83@yahoo.com

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா?விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட-இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

## எரிக்கணேஷ்



### மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

**கிளைகள்:**
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.



## புதிய வினோ நகைமாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
பிரதான வீதி (செலான் வங்கிக்கு அருகாமை)
சங்கானை T.P.: 0776002588

## Mobile Plaza
## Phone Shop

### மொபைல் ப்ளாசா போன் சொப்

Main Street, Chankanai
T.P.:0779352902 பிரதான வீதி, சங்கானை.

# HOLCIM CEMENT

**Jaffna District Batas**
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

SRI RANGAN ENTERPRISES
370, Hospital Road, Jaffna.

**ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்**
**370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
T.P - 021 222 2027

*Selva Hardware*
120, Stanley Road, Jaffna.
**செல்வா காட்வெயர்**
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P - 021 222 2873




DELMEGE- மில்க்குறோ, பேக்கிங்பவுடர், ஜாம், ஐசிங்சுகர், ரின் மீன், TVP சோயாமீற், ஜலற்றீன், புடிங்,-நூடில்ஸ், கஸ்ரட் பவுடர், கரமல், வட்டிலப்பம், கொக்கோப்பவுடர் அனைத்தையும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

**Lanka milk Food**
Dairy farm
My juice
Farleys Rusk 150g
Casilian 250g

Corn Flaskes
Farleys Rusk 60g
Casilian 120g
Happy Cow Cheese





அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் அஞ்சலி நிகழ்வு அண்மையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமரரின் திருவுருவப்படத்திற்கு நிறுவன செயலாளர் ம. தியாகராஜா மலர் மாலை அணிவிப்பதையும் இணையத்தின் செயலாளர் வி. ஸ்ரீசக்திவேல் சுடர் ஏற்றுவதையும் திட்டமுகாமையாளர் க. எழில்முதல்வன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## ஹெஜிங் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடிவு

(கொழும்பு)

ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பாக லண்டன் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதியை லண்டன் நீதிமன்றம் வழங்கியுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் இம் மேன்முறையீட்டு நடவடிக்கையை கையாள்வதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கருத்து தெரிவிக்கையில் ,வர்த்தக நீதிமன்றமொன்றின் உத்தரவு மேன் முறையீடொன்றால் இரத்து செய்யப்படுவதற்கு வாய்ப்பில்லை. அப்படி இரத்து செய்யப்படுவதற்கு மிகப் பலமான சட்ட நிலைப்பாடு இருக்க வேண்டும் எனக் கூறினார்.

ஹெஜின் உடன்படிக்கையின் படி ஸ்டான்டட் வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய பணம் செலுத்தப் படாததால் அவ்வங்கிக்கு 162 மில்லியன் அமெரிக்க டொடர்களும் (சுமார் ஆயிரத்து 771 கோடி ரூபா) வட்டியும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்க வேண்டும் என கடந்த திங்கட்கிழமை லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத் தக்கது.

(ஸ்ரீ-4)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சுகாதர திணைக்களம் நெறிப்படுத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை தாளையடி தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் கொழும்பு, யாழ்ப்பாணம்,பருத்தித்துறை , சாவகச்சேரி ஆகிய வைத்தியசாலைகளின் வைத்திய நிபுணர்களும் வைத்திய அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

இதில் பொது மருத்துவம், சத்திர சிகிச்சை ,சிறுவர் மருத்துவம், கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை, காது, மூக்கு , தொண்டை சிகிச்சை, தோல்சிகிச்சை, பற்சிகிச்சை ஆகிய நிபுணத்துவ சேவைகள் வழங்கப்படும்.

மேலும் இங்கு நடமாடும் ஆய்வு கூட மருத்துவ சோதனைகளும் ஈ.சி.ஜி, ஸ்கானிங் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். இப்பிரதேசத்தை சேர்ந்த மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் பங்கு பற்றி பயன் பெறலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

## பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதில் அர்த்தமில்லை

### தேசிய இயக்கங்களின் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதில் அர்த்தமில்லை என தேசிய இயக்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் திட்டமானது அரசியல் சாசனத்திற்கு முரணானது என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் செயன்முறையில் மக்களின் பங்களிப்பு இன்றியமையாதது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)




★ 1223-எட்டாம் லூயி பிரான்சின் மன்ன னாக முடி சூடினான்.

★ 1789-பிரெஞ்சுப் புரட்சி: பாரிஸ் மக்கள் பாஸ்டில் சிறையைத் தகர்த்து சிறைக் கைதிகளை விடுவித்து இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றினர்.

★ 1865-எட்வர்ட் வைம்ப்பர் தனது உத வியாட்களுடன் ஆல்ப்ஸ் மலைத் தொடரின் மாட்டர்ஹோர்ன் மலை யின் உச்சியை முதற் தடவையாக எட்டினார். இவர்கள் திரும்பி வருகையில் இவருடன் வந்த 4 பேர் உயிரிழந்தனர்.

★ 1889-பாரிசில் கூடிய சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் பாராளுமன்ற நிகழ்வுகளில் பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் பங்கேற்றனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி வேலை நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என முடிவாகியது.

★ 1933- ஜேர்மனியில் நாசிக் கட்சி தவிர்த்து அனைத்து அரசியற் கட்சிகளும் தடை செய்யப்பட்டன.

★ 1948-இத்தாலியின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பல்மீரோ டொக்ளியாட்டி பாராளுமன்றத்துக்கு முன்னால் சுடப்பட்டார்.

★ 1958-ஈராக்கியப் புரட்சி: ஈராக்கில் மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அப்துல் கரீம் காசிம் நாட்டின் புதிய தலைவரானார்.

★ 1965-மரைனர் 4 செவ்வாய்க் கோளுக்குக் கிட்டவாகச் சென்று முதற் தட வையாக வேறொரு கோளின் மிக அண்மையான படங்களைப் பூமிக்கு அனுப்பியது.

★ 1966-குவாத்தமாலா நகரில் மன நோய் வைத்தியசாலையில் இடம்பெற்ற தீவிபத்தில் 225 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1967-நாசாவின் சேர்வெயர் 4 ஆளில்லா விண்கலம் ஏவப் பட்டது.

★ 1989-பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவை பிரான்ஸ் கொண்டாடியது.

★ 1995-MP3 பெயரிடப்பட்டது.

★ 1997-சேகுவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபா வந்தடைந்தன.

★ 2002-பாஸ்டில் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்ட பிரெஞ்சு ஜனாதிபதி சிராக் கொலை முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பினார்.

★ 2007-ஐரோப்பாவில் மரபுவழி இராணுவப் படைகள் குறித்த உடன்பாட்டில் இருந்து ரஷ்யா விலகியது.

**பிறப்புக்கள்**

★ 1929-வா.செ.குழந்தைசாமி, இந்தியப் பொறியியல் அறிஞர்


★ 1943-ரோகண விஜயவீர, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், புரட்சியாளர் (இ.1989)

★ 1827-அகஸ்டின்-ஜீன் ஃபிரெனெல், பிரெஞ்சு இயற்பியலாளர் (பி.1788)

★ 1998-டிக் மக்டொனால்ட், மக்டொனால்ட் நிறுவன தாபகர் (பி.1909)

★ 2008-சுசுமு ஒனோ, ஜப்பானியத் தமிழறிஞர் (பி.1919)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 48

"கொசு என்னைக் கடிக்கும், அதைப் பட்டென்று அடித்துக் கொன்று விடுகின்றேன். அந்த மாதிரி சமயங்களில் குரூர திருப்தி எனக்குக் கிடைக்கிறது. எனக்குள் மிருக குணம் தலை தூக்குகிறதா?"

ஒரு புலியையோ சிங்கத்தையோ வேட்டையாடும் துணிச்சல் உங்களிம் இல்லை. உங்களால் முடிந்தது எல்லாம் ஒரு கொசுவை வேட்டையாடுவதுதான். இதில் திருப்தி கிடைத்தால், அது உங்கள் பரிதாப நிலையையே எடுத்துக் காட்டுகிறுது.

சில குணங்களை மிருக குணம் என்று அழைப்பது, மிருகங்களை விட நீங்கள் உயந்தவர் என்று உங்கள் மனதில் ஊன்றியிருக்கும் அகங்காரத்தினால்தான்.

எந்த மிருகமும் மனிதனைப் போல குரூர திருப்திக்காக கொடூரமாக நடந்து கொள்வது இல்லை. புலி கூட மானை அடிப்பது, அதை உணவாக்கிக்கொள்ளத்தான்! எந்த வக்கிரமான வஞ்சத்தாலும் அல்ல. இயற்கை அதற்கு வழங்கியுள்ள இயல்பு அது.

கொசுவை அடிப்பதில் குரூர திருப்தி கிடைக்கும் என்று இப்போது தான் கேள்விப்படுகிறேன்.

என்அறையில்கொசுக்கள் இருந்தால், அவற்றை எப்படி விரட்டுவது என்று பார்ப்பேனே தவிர,அதில்எனக்கு மகிழ்ச்சியோ,துக்கமோ ஏற்படுவதில்லை.

**"எல்லா உயிர்களிடத்திலும் கருணையோடு இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். காரில் அடிபட இருந்த ஒரு நாய்க்குட்டியைக் காப்பாற்றினேன். அதே கருணையை கொசுவிடம் என்னால் காட்ட முடியவில்லையே! நோயைக் கொண்டு வரக்கூடிய கொசுக்களிடம் எப்படி கருணையோடு இருக்கமுடியும்?"**

கருணை வேறு; பரிவு வேறு!

ஓர் உயிரிடத்தில் அனுதாபம் கொண்டு வெளிபடுத்தும் பரிவை, கருணை என்று தவறுதலாகக் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

ஒருவருக்கு உதவி தேவைப்படும் போது, அன்பு கொண்டு அவரிடம் காட்டுவது பரிவு, உங்களைச் சார்ந்திருப்பவரிடம்தான் நீங்கள் பரிவு காட்டமுடியும். தன் கால்களில் நிற்கத்துணிந்தவர்களிடம் நீங்கள் பரிவு கொண்டால், அவர்அதை ஏளனமாகவே பார்ப்பார்.

## கருணை என்பது ஓர் உணர்வு

பரிவு என்பது ஒருவித அனுதாப மனப்பான்மை! கருணை அப்படிப்பட்டதல்ல. அது பாரபட்சமற்ற ஆழமானதொரு பிரிய உணர்ச்சி. விருப்பு, வெறுப்பு என்ற எந்த உணர்ச்சிகளோடும் அது சிக்கிப் போவது இல்லை.

உதவியற்றவர்களிடம் மட்டுமே காட்டக்கூடிய உணர்வு அல்ல அது. சார்ந்திருப்பவர், சாராதிருப்பவர், அறிந்தவர்,அறியாதவர்,தெரிந்தவர், தெரியாதவர் என்று எந்தவித வேறுபாடும் காட்டாமல்,சுற்றி உள்ள ஒவ்வொன்றின் மீதும் தீவிர ஆர்வம் கொள்ளும் உணர்வு அது.

நீங்கள் சுவாசிக்கும் காற்று,நீங்கள் நடக்கும் பூமி, காணும் தாவரம், நுகரும் வாசம், கொதிக்கும் சூரியன், குளிரான சந்திரன் எல்லாவற்றிடமும் ஒரேவிதமான ஈடுபாட்டுடன் இயங்குவது கருணை.

ஆண், பெண், குழந்தை, விலங்கு, பறவை, மீன்,தவளை என்று எந்த உயிராக இருந்தாலும், அத்தனை பேரிடமும் ஒரேவிதமான முழுமையான பாரபட்சமற்ற பிரியம் கொள்வதே கருணை.

உயிர்களிடத்தில் மட்டுமல்ல, பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றையும் ஒரேவிதமாக உணரக்கூடிய உணர்வு கருணை.

கருணையோடு இருக்கையில், வாழ்க்கை அதன் முழுமையான நிலையில் நிகழ்கிறது. அந்தந்த சூழ்நிலைகளுக்குத் தேவையான செயல்கள் விருப்பு வெறுப்பின்றி வெளிப்படுகின்றன.

கருணையோடு வாழ்க்கையில், யார் யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எந்த பாடமும் உங்களுக்கு எடுக்கத்தேவை இல்லை.

**"எனக்குள் இருக்கும் உறுத்தலை நேரடியாகவே கேட்கிறேன் கொசுவைக் கொல்வது பாவச் செயலா?"**

ஒவ்வொரு செயலுக்கும் ஒருபின் விளைவு உண்டு. உங்கள் செயலுக்கான விளைவு எப்படி இருந்தாலும், அதை நீங்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளத் தயாரானால், அது நல்லதா, கெட்டதா என்ற கேள்வியே வராது. கர்ம வினைகள் பற்றிய கவலையே இராது.

மற்றபடி பாவம், புண்ணியம் என்பதெல்லாம் சொர்க்கம் பற்றிப் பேசுபவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள்.

காட்டுக்குள் நடந்தார் ஒரு சந்நியாசி. இரண்டு கால்கள் உடைந்து போன ஒரு நொண்டி நரியை அங்கே கண்டார். ஐயோ, உணவுக்கு இந்த நரி என்ன செய்யும்! என்று கவலைப்பட்டார்.

அப்போது,சிங்கம் ஒன்று தான் வேட்டையாடிய இறைச்சியை இழுத்து வந்து நரியின் அருகில் போட்டது. கடவுள் அவருக்கு ஏதோ சேதி சொன்னதுபோல் இருந்தது.

தனக்கான உணவு கிடைக்க வேண்டுமானால், அதை எப்படியும் தெய்வம் கிடைக்கச்செய்யும் என்று முடிவு செய்தார். உணவு தேடுவதை விடுத்து , கடவுளை நினைத்து ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டார்.

நாட்கள் உருண்டன. பசி முற்றியது. யாரும் அவருக்கு உணவு கொண்டு தரவில்லை. 18நாட்களில் சக்தி எல்லாம் இழந்தார். பரிதாபமாகச் சுருண்டு கிடந்தார்.

அந்தப் பக்கம் யோகி ஒருவர் வந்தார். நடந்ததை விசாரித்து அறிந்தார். "கடவுள் உனக்கு ஒரு சேதி சொன்னது உண்மைதான். ஆனால் மற்றவரிடம் உணவைப் பகிர்ந்து கொண்ட அந்தச் சிங்கம் போல் வாழச் சொன்ன சேதியை,நரிபோல் வாழச் சொன்னதாகத் தப்பர்த்தம் செய்து கொண்டது நீதான்" என்றார்.

எனவே பாவமா, புண்ணியமா என்று கர்ம வினைகளைப்பற்றி சிந்தித்து கொண்டிராமல், எல்லா உயிர்களிடத்தும் பாரபட்சமின்றி உணர்வு கொள்ளுங்கள். இந்தப் பக்குவம் வருவதற்கு, சுற்றியுள்ள ஒவ்வொன்றையும் உங்களில் ஒரு பகுதியாக உணர்ந்து பாருங்கள். அதன்பிறகு கோபம், வெறுப்பு, குரூர திருப்தி போன்ற உணர்ச்சிகளுக்கு உங்கள் வாழ்க்கையில் இடமே இராது.

இப்படி மற்றவற்றுடன் கரைந்து, உங்களை உணரும் அதே தீவிரத்தோடு மற்ற அத்தனையையும் உணரும் நிலையே யோகா என்னும் அமுதம்!

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# கூத்துருவம் ஊடாக புதுப்பரிமாணம் பெறும் ஈழத்து அரங்கம் 'இராவணேசன்', 'அற்றைத்திங்கள்'

1. அறிமுகம்

ஈழத்து தமிழ் நாடக அரங்கில் 1960 களில் பேராசிரியர். சு. வித்தியானந்தன் தொடக்கி வைத்த ஈழத்து கலை மூலகங்களை அடையாளப்படுத்தி ஆக்கக்கலையாக உருவாக்கும் முயற்சி இன்றுவரை பல்வேறு கட்டங்களைத் தாண்டி முன்னேறி வருகின்றது. கூத்தைச் சுருக்கி படச் சட்ட மேடைக்கு தயார் பண்ணியது ஒரு கட்டம் (அறுபதுகள்) கூத்து வடித்துக்குள் சமகால பிரச்சினைகளை கூற முணைந் தது. அடுத்த கட்டம் (எழுபதுகள்) கூத்து வடிவங்களான ஆடல், பாடல் மற்றும் தொன்மங்களை சமகாலப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல பயன்படுத்தியது. இன்னொரு கட்டம் (எண்பதுகள்). தற்போது பழைய கதைகள், தொன்மங்கள், கூத்துப்பாடல்கள், ஆடல்கள் மற்றும் கர்நாடக இசை ஆக்க ஆட்டங்கள், இசைக்கோர்வைகள் எனப்பல ஆடல், பாடல் முறைமைகளை கலா இரசனையுடனும், சமகால வியாக்கியானம் இயல்பாக நடைபெறும் வண்ணம் தயாரித்து மேடையேற்றல் இன்றை நிலைமை. இப்பின்னணியில் சமகாலத்தில் எழுந்த இரு நாடகங்களைக் கருத்தில் கொள்வோம்.

**2.சமூக உணர்ச்சி வெளிக்கொணர்கையை (Social Cathasis)ஏற்படுத்தும் மௌன குருவின் இராவணேசன்........**

மனிதகுலம் இப்பெரும் பூமியை தனது வாழ்வியலின் பல பரிமாணங்களோடும் புடம் போட்டு வந்துள்ளது. அவ்வாழ்வின் தடயங்களாக மாடமாளிகைகள், கோயில்கள், கோபுரங்கள், சித்திரங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், இலக்கியங்கள் என்பன கிடைக்கப் பெறுகின்றன. இவற்றுள் கட்டடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் அப்படியே மண்ணுள் மறைந்து போகலாம்.

ஆனால் இலக்கியங்கள் நாடோடிக் கதைகளாக வாய்மொழி மரபின் ஊடாக (எழுத்துக்கள் தேய்ந்து போனாலும் கூட ) உயிர் பெறுகின்றன.

## இரு கூத்துருவ நாடகங்கள் மீதான ஒரு விமர்சனம்

கிரேக்கத்தின் பெரும் காவி யங்களான ஹேமரின் ***இலியட்*** மற்றும் ***ஓடிசி*** போன்ற காவியங்களும் சோபோக்கிளிசின் கிரேக்க நாடகங்களும் சோசரின் கன்ரபரி கதைகளும், சேக்ஷ்பியரின் நாடகங்களும் மற்றும் கிழக்கு தேசங்களில் சமஸ்கிருதத்தில் எழுந்த மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களும், காளிதாசனின் நாடகங்களும் தமிழில் -இளங்கோவின் சிலப்பதிகாரமும் மற்றும் பண்டைய சீனா, ஜப்பான், ஆபிரிக்க இலக்கியங்களும் மனித குலத்தின் வாழ்வை வரலாற்றுப் பதிவாகத் தருகின்றன.

காலந்தோறும் புதிய புதிய இலக்கியங்கள் தோன்றினாலும் காத்திரமான மனித உணர்வுகளை துல்லியமாக எடுத்துக் காட்டும் பழைய இலக்கியங்களின் மௌசு இன்னும் குறையவில்லை. புதிய புதிய கோணங்களில் புதுமைக் கலைஞர்கள் தோன்றத் தோன்ற புதுப்புதுப் பிரவாகம் எடுக்கும் கலைகளாக அவை பரிணமிக்கின்றன. அந்த வகையில் பேராசிரியர் மௌனகுருவின் ***இராவணேசன்*** புதுமைகளை உள்வாங்கி புதுக்கோலம் போடுகின்றான். ஓர் இதிகாச அவல நாயகனைக் கதாநாயகனாக்கி ஏற்கனவே பல நாடகங்கள், கூத்துக்கள் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அரங்கேறி வந்துள்ளமை யாவரும் அறிந்ததே. வால்மீகி இராமாயணத்தி லிருந்தும் கம்பராமாயாணத்தில் இருந்தும் மூலகங்கள் பெறப்பட்ட போதும் ஒரு நாட்டாரியல் கோலத்துடன்தான் பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்த ***இராவணேசன்*** அறுபதுகளில் தோன்றினான்.

வடமோடி கூத்தில் அமைந்த அந்த இராவணேசனில் இராவணனாகப் பாகம் ஏற்றும், பேராசிரியர் வித்தியானந்தனின் எழுத்துருஆக்குபவனாகவும், திகழ்ந்த கலைஞர் மௌனகுரு தனது நீண்ட கலைப்ப யணத்தில் இராவணேசனை மீண்டும் மீண்டும் 2001, 2003, 2010, ஆகிய ஆண்டு களில் பல்வித வளர்ச்சிகளை மேற் கொண்டு புதிய கோலங்களைப் படைத்து வருகின்றார்.

**01**

இராவணேசனை ஓர் அவலச் சுவையகனாக காட்ட முனைந்தனர் பேராசிரியர் சிவத்தம்பியும் வித்தியானந்தனும். அறுப துகளில் அன்று இந்த நாடக இலக்கியத்தை உள்வாங்கிய கலைஞர் மௌன குரு தான் வரித்துக் கொண்ட மார்க்சியம், மற்றும் ஈழத்துப் பண்பாட்டு பார்வையூடா கவும் பாரம்பரிய வேட உடுப்பு, முக ஒப் பனை, ஆடை அணிகலன்கள் பற்றிய கலைக் கண்ணோடும் புதுமைப் படுத்தி தனது ***இராவணேசனை*** 2001 ஆம் ஆண் டில் உருவாக்கினார்.

2003 இல் போர்க்கோலங்கள், பாத்திர வரவு என்பன மேலும் மெருகூட்டப்பட்டு உருவான இராவணேசன் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு எனப் பல மேடைகளைக் கண்டது. 2010இல்

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**

கொழும்பில் தோன்றிய இராவணேசன் நாடகம் போர்க்காட்சிகளையும், மண்டோதரியின் துயரையும் முன்னிலைப்படுத்தியுள்ளது. இங்கு கும்பகர்ணனின் எதிர்வாதமும், இந்திரஜித்தின் மனம் சோர்ந்த போரும் பார்வையாளர் மனதைத் தொட்டுச் சென்றன.

(தொடரும்)

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்-2011.07.14

## வேரோடு வினைகளைவாய்

*தேரேறி வரும் தேவியே தாயே அருள் நாக பூஷணியே*
*வேரோடு வினை களைந்து எம் வேதனை தீர்த்திடுவாய்*
*போரோய்ந்து நாமினி நிம்மதியாய் வாழ்ந்திடவே—நீ*
*பாரோர் போற்றிட வந்து பத்மபதம் தருவாய் சரணம்!*

சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்


இன்று தேர்ப்பவனி வரும் நாகபூஷணித் தாயே உனை நாடி வருவோர்க்கு நல்லருள் புரிவாய்

**ஸ்ரீ வெங்கடேஸ்வரா றேடர்ஸ்**

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உருளைக்கிழங்குகளின் மொத்த விற்பனையாளர்
தரமான உருளைக்கிழங்குகளைப் பெற்று தரமாக விற்பனை செய்யுங்கள்

சில்லறை, மொத்த வியாபாரிகளுக்கு விசேட தள்ளுபடி வழங்கப்படும்.

மளிகைப் பொருட்களையும் எம்மிடம் மொத்தமாகப் பெற்றுக் கொள்ள முடியும்

இல 71, நவீன சந்தை,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

இல. 589, 591, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.:021 222 4579

தேரேறும் தாயே! தீவினைகள் களைவாய்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**றூபி நகை மாளிகை**



111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே – 021 222 2828
021 222 9038

அவனியில் அல்லல் தீர்த்திட அருள் தாரும் அம்மா!

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய டிசைன்களில் தங்க, வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

**ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்**



தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

இல:10, பஸ் நிலையம், சங்கானை

**Dulux**







கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள் ( எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ), நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

AkzoNobel
Tomorrow's Answers Today

**கஜமுகன் ஹாட்வெயர்**

147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 2833

# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்


## இரதோற்சவ சிறப்பு மலர் – 14.07.2011

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணத்தில் வண்ணைப் பதியில் வடகிழக்கே அமைந்துள்ள இவ்வாலயம் தமிழரசர்களால் அமைக் கப்பட்ட பழமை வாய்ந்த ஆலயமாகும். 1268 ஆம் ஆண்டு நல்லூரிலே தமிழரசமைந்திருந்த வேளையில் புகழேந்திப் புலவர் பாடி பரிசு பெற்றமையும் பிற நாட்டு யாத்திரிகர் யாழ்ப்பாணத்தரசினுதவிபெற்றுச்சிவனொளிபாத மலைக்குச் சென்றதும் வரலாற்று நிகழ்வுகளாகும். நல்லூரை அழகுபடுத்திய பரராசசேகரனே நாற்றிசைகளிலும் நகர்காவற் கோவிலில் செய்ய விரும்பி கிழக்கில் வெயிலு கந்தப்பிள்ளையார் கோவிலையும் தெற்கில் கைலாசநாதர் கோவிலையும் (புனரமைத்தும்) மேற்கில் வீரமாகாளி அம்மன் கோவிலையும் வடக்கில் சட்டநாதர் கோவிலையும் 1470 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டுள்ளது.

சங்கிலி மன்னன் போரிற்குப் புறப்படுகையில் ஆயுதங்களை அம்பாளின் திருவடியில் வைத்துபூஜை செய்து செல்வது வழக்கம். இன்றும் மன்னனின் உடைவாள் இங்கு காணப்படுவதுடன் மானம்பூவில் வாழை வெட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

தேரோடும் வீதியும் சுத்தநீர்க்கிணறும் மருதமரமும் அரச மரமும் உள்ளன. மேற்குவீதியில் எண்கோணத்தில் அமைக் கப்பட்ட நீர்த்தொட்டி காணப்படுகிறது. இங்கு வருடாந்த உற்சவமும் மாதாந்தத் திருவிழாக்களும்



## மஹோற்சவ பிரதம குருவின் ஆசியுரை

யாழ். வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்பாளின் தேர்த் திருவிழா இன்று (14.07.2011) வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது. இப் புனிதமான நன்நாளில் எம் பெருமாட்டியை நித்தமும் தொழுது பாக்கியம் கிடைத்த நா.சிவதர்சக்குருக்கள் குடும்பத்தினருக்கும் ஆலய தொண்டர்சபை தொண்டர்களுக்கும் மெய்யுணர் பக்த அடியார்களுக்கும் அகிலாண்ட நாயகி ஜமபயம் நீக்கும் வீரத்தாய் வீரமாகாளி அம்பாளின் அனுக்கிரகத்தினோடு நல்லாசிகள் நல்குவதில் பெருமகிழ்வடைகிறோம்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**

**துவஜாரோகண விபூசணம்**

Yogi's Beauty
(The Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)
அழகுக்கலை (Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course)
Advanced Cosmetology (Diploma Course)
நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make Up- Hair Styles
10 வகையான சாறிகட்டும் முறைகள்.
கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Birthday Cakes, Fondant Structure & Sugar Flowers)
பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
எமது நிறுவனத்தில் அளிக்கப்படும் Advanced Facial சிகிச்சைகள்.
உங்கள் முகத்தில் அம்மைத் தழும்புகள், பள்ளங்கள், கரும்புள்ளிகள் இலைகளுக்கு
எமது நவீன DERMABRASION TREATMENT மூலம் புதுமையான முறையில் சிகிச்சைகள்.
இப்படி பல நவீன சேவைகளுடன் மணப்பெண் அலங்காரம் எமது சிறப்பம்சமாகும்.
Mrs. Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Advanced Cosmetology (India)
Diploma in Advanced Bridal Makeup & Character Makeup (India)
Diploma in Home Economics (India & Srilanka)
T.P:0212222796, 0213210077, 0777164923, 0718788814 yogis beauty@gmail.com

கிளிநொச்சியில்...
அரச அங்கீகாரம் பெற்ற
சாரதி பயிற்சி பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:021 222 4353
0777225292
கிளை:கிளிநொச்சியில்
ஜயனார் வீதி (கச்சேரிக்கு அருகாமை),
கிளிநொச்சி. தொ.பே:-021 228 5505, 0777238600

துவிச்சக்கர வண்டிகள், அதன் உதிரிப் பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், டிஸ் அன்ரனா வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இ.ச.பே நாகரத்தினம் சக நிறுவனம்
தொ.பே:-021 222 3096
52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிருஷ்ணா நகை மாளிகை
குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
கிளை : கிருஷ்ணா அடகுக்கடை
இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046

## இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பல் விடுதலைப்புலிகளுக்கு சொந்தமானது

### திவயின தகவல்

இந்தோனேசியாவில் தடுத்துவைக்கப் பட்ட கப்பல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சொந்தமானது என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எம்.ஏ. எலிஸ் எனப்படும் குறித்த கப்பல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சொந்தமானது என இந்தோனேசிய இரகசிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நோர்வே வாழ் புலம்பெயர் தமிழர்களே குறித்த கப்பல் பயணத்திற்கான உதவிகளை வழங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

நியூசிலாந்தில் புகலிடம் கோரி போராட்டம் நடத்தி வரும் இலங்கையர்கள் முதலில் தாய்லாந்து சென்றதாகவும் அங்கிருந்து இந்தோனேசியா சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றுக்கொள்ள முடியாது என நியூசிலாந்து அறிவித்துள்ளது.

புகலிடம் வழங்கும் வரையில் கப்பலில் இருந்து இறங்கப் போவதில்லை என கப்பல் பயணிகள் போராட்டம் நடத்தியும் வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

## நெல்சிப் திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைப்பு


வடக்கு- கிழக்கு உள்ளூர்சேவைகள்மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தினை நான்கு வருடத்தில் செயற்படுத்தும் நோக்கத்துடன் வலி கிழக்கு பிரதேச சபையினரால் மக்கள் பங்களிப்புடனும் முன்னுரை அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்ட கோப்பாய் கிழுவானை வீதி 9.99 மில்லியன் ரூபா செலவிலும், அச்செழு தனிப் பனையடி வீதி 8.25 மில்லியன் ரூபா செலவிலும், புத்தூர் வன்னியசிங்கம் வீதி 11.31 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான வீதி திருத்த வேலைகள் நேற்று அமைச்சர்கள் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோர் முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி வேலைத்திட்டத்தினைத் தொடர்ந்து மக்களினால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பதினொரு வீதிகளுக்குமான திருத்த வேலைக்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இவ் வீதிகளும் மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.(ஸ்ரீ – 2)

## நாய்க்கூட்டில் தங்க வைக்கப்பட்டிருந்த 65 வயது தாய் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)



மாத்தறை, நூப்பே பிரதேச வீடொன்றிலுள்ள இருட்டறை யொன்றை நாய்க்கூடு வடிவில் வடிவமைத்து அதனுள் நாயுடன் தங்க வைக்கப்பட்டிருந்த 65 வயது மூதாட்டி ஒருவரை மாத்தறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நான்கு பிள்ளைக ளின் தாயாரான மேற்படி மூதாட்டி குறித்த நாய்க் கூட்டினுள்ளேயே காலத்தைக் கழித்து வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே மாத்தறை பொலிஸின் சிறுவர் மற்றும் மகளிர் விவகாரப் பிரிவு அவரை மீட்டுள்ளது.

குறித்த கூண்டுக்குள்ளிருந்த நாய் மேற்படி மூதாட்டி அங்கிருந்து வெளி யே செல்லாது பாதுகாத்து வந்ததாகவும் குறித்த நாயை அங் கிருந்து அகற்றிய பின்னரே அவர் பாது காப்பாக மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

## மாணவ தாதியருக்கு பயிற்சிகள்

(மருதங்கேணி)

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து 15 மாணவ தாதிகள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்கள் தமது 3 ஆம் வருட பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகும் வரை தமது கடமைகளை மேற்கொள்வார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2-35)

# தண்டனைக்காலம் நிறைவுற்ற போதும் ஒரு வருடமாக சிறையில் வாடும் இளைஞன்

(கொழும்பு)

தண்டனைக்காலம் நிறைவடைந்த பின்னரும் ஒரு வருடகாலமாக சவுதி சிறையிலுள்ள தம்மை விடுவிக்குமாறு இலங்கை இளைஞர் ஒருவர் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு சவுதிக்கு தொழில் நிமித்தம் சென்ற குறித்த நபருக்கு கடந்த 2007 ஆம் ஆண்டு கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஜூலை மாதத்துடன் குறித்த நபரின் தண்டனைக் காலம் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த இளைஞனை விடுதலை செய்யும் நடவடிக்கைகளில் தலையீடு செய்யுமாறு வலியுறுத்தி அவரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை முன் வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சவுதிக்கான இலங்கைத் தூதரகத்திடம் வினவிய போது, குறித்த இளைஞனின் தண்டனைக்காலம் பூர்த்தியடைந்துள்ள போதிலும் சவுதி சட்டங்களுக்கு அமைய அவர் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் இது வரையில் நிறைவடையவில்லை என கொன்சியூலர் பிரிவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் குறித்த இளைஞனை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வருடாந்தம் 60 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை இழக்கின்றனர்

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் வருடாந்தம் 60 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழப்பதாக வெளிவாரி பட்டப்படிப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் குறைந்த பட்சம் 60 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான இசட் புள்ளிகளைப் பெறத் தவறுவதாக மேற்படி மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் கே.பி. சோமசிறி தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினதும் முரண்பாடான அறிக்கைகள் காரணமாக நாடெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்டப்படிப்பு முறைமையின் ஸ்திரத் தன்மை நிச்சயமில்லாதுள்ளது எனவும் அவர் கூறினார்.

(ஸ்ரீ-2)

# வடக்கு மாகாண உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுதிட்ட அங்குரார்ப்பண நிகழ்வுகள்

வடமாகண சபையால் உள்ளூராட்சி சபைகள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுகளின் முதற்கட்டமாக நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபை, வலி.கிழக்கு பிரதேச சபை மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை ஆகியவற்றில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் எரிபொருள் மின்சக்தி துறை பிரதி அமைச்சர் பிறேமலால் ஜயசேகர, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர். நல்லூர் பிரதேச சபையின் அரியாலை மணியந்தோட்டம் பிரதேசத்தில் உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள மணிப்புரி வீதியின் திருத்தவேலைகளின் ஆரம்ப நிகழ்வு அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் வடமாகாணசபை உள்ளூராட்சித் சேவைகள் முகாமைத்துவக் குழுவினால் காலாண்டுச் சஞ்சிகையாக வெளிக்கொண்டுவரப்படவுள்ள ஏற்றம் சஞ்சிகையின் முதற்பிரதி வெளியீடு மற்றும் உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கோடு தயாரிக்கப்பட்டுள்ள இரு கையேடுகளின் வெளியீடு என்பனவும் இடம்பெற்றன.

இந் நிகழ்வுகளின் அடுத்த கட்டமாக உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள வலி.கிழக்கு பிரதேச சபையின்-கோப்பாய் கிளுவானை வீதியின் ஆரம்ப வேலைகளும் அவ்வீதிக்கு வீதி விளக்கு அமைக்கும் நிகழ்வும் அமைச்சர் பசில் ராஜ பக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப் பட்டன.

இந்நிகழ்வுகளின் இறுதியில் வடமாரட்சி தெற்கு மேற்கு பிரதேச சைபயின் தெரிவு செய்யப்பட்ட வீதியான துன்னாலை மத்தி, மித்தில் செம்பாடு வீதியின் புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கும் நிகழ்விலும் அமைச்சர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

(ஸ்ரீ-2)

# தெற்காசிய கடல்சார் பாதுகாப்பு மாநாடு கொழும்பில் ஆரம்பம்



(கொழும்பு)

தெற்காசிய கடல்சார் பாதுகாப்பு மாநாடு கொழும்பு கலதாரி விடுதியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம்மாநாட்டில் பங்களாதேஷ், மாலைதீவு, இலங்கை, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இம்மாநாடு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசாநாயக்க ஆகியோரால் நேற்று முன்தினம் காலை ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இலங்கை கடற்படையுடன் பொதுமக்கள் படைத்தரப்பு உறவுகளுக்கான நிலையம் மற்றும் அமெரிக்காவின் பசுபிக் கட்டளை நிலையமும் இணைந்து இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இம்மாநாட்டை தெற்காசிய் கடல்சார் பாதுகாப்பு மாநாடு என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் தெற்காசியாவின் இரு பிரதான கடற்படைகளைக் கொண்டுள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இந்தியா மேலும் 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்களை வழங்கவுள்ளது

(கொழும்பு)

வடபகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வீடுகளை நிர்மாணிப்பதற்கென மேலும் 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்களை இந்தியா வழங்கவுள்ளது.

மீளக் குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா 12 கூரைத்தகடுகளுடன் தலா ஏழு சீமெந்து பைக்கற்றுக்களும் வழங்கப்பட்டன. ஏற்கனவே இந்தியாவிலிருந்து இலவசமாக வழங்கப்பட்ட 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

எனினும் வழங்கப்பட்டுள்ள சீமெந்து போதுமானதாக இல்லாததால் மேலும் 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 2009 முதல் 2011 வரையிலும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 18 ஆயிரத்து 475 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 800 சீமெந்து பைக்கற்றுக்களும் கிளிநொச்சியில் 9 ஆயிரத்து 120 குடும்பங்களுக்கு 72 ஆயிரத்து 960 சீமெந்து பைக்கற்றுக்களும் முல்லைத்தீவில் 6 ஆயிரத்து 405 குடும்பங்களுக்கு 51 ஆயிரத்து 240 பைக்கற்றுக்களும் வவுனியாவில் 8 ஆயிரம் பேருக்கு 64 ஆயிரம் சீமெந்து பைக்கற்றுக்களையும் மன்னாரில் 8 ஆயிரம் குடும்பங்களுக்கு 64 ஆயிரம் சீமெந்து பைக்கற்றுக்களும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

விரைவில் இந்தியா வழங்கும் 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்களும் இவ்வாறே பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் மீள்கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | -15.07.2011-20.07.2011 பி.ப.2.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி | -21.07.2011 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்வி திறந்து பார்க்கும் திகதி | -21.07.2011 பி.ப.1.30 மணி |
| கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம் | -தலைமை அலுவலகம், சுன்னாகம். |

| வேலையின் விபரம் | மீளளிக் கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|
| 1.மருதனார்மடம் சந்தையில் இலத்திரனியல் மின் தராசு பொருத்துவதற்கான கொட்டகை அமைத்தல். | 9000.00 | 560.00 | M8/C9 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட ''இக்ராட்'' தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தை கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணத்துடன் மேலதிகமாக 3% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதி "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
13.07.2011.

திருமதி சு.முருகநேசன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-3724)





# வடக்கின் வசந்தம்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு






மகிந்த சிந்தனையின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பின்வரும் வேலைத்திட்டங்கள் 13.07.2011 அன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


1. மாநகரசபை வீதிகள்:-

முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகரசபையின் 35 ம.அ நீளமான 42 வீதிகள் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் திட்ட செயற்பாட்டு பிரிவின் கண்காணிப்பின் கீழ் 710 மில்லியன் ரூபா செலவில் காப்பெற் வீதிகளாக புனர்நிர்மாணம் செய்யப்படும்.

| வீதியின் பெயர் | |
|---|---|
| வேம்படி வீதி | கோயில் வீதி |
| முன்பக்க வீதி | 3ஆம் குறுக்குத்தெரு |
| வைத்தியசாலை வீதி | மகாத்மா காந்தி வீதி |
| 2ஆம் குறுக்குத்தெரு | 6ஆம் குறுக்குத்தெரு |
| கடற்கரை வீதி | புனித ஜேம்ஸ் வித்தியாலய வீதி |
| வட்ட வீதி | நீர்த்தாங்கி வீதி |
| 4ஆம் குறுக்குத்தெரு | நீர்த்தாங்கி 1ஆம் குறுக்குத்தெரு |
| பண்ணை செஸ்ட் கிளினிக் வீதி | புனித பற்றிக்ஸ் வீதி |
| பங்சல் வீதி | புனித செபஸ்ரியான் வீதி |
| நாவலர் வீதி | கார்மேல்மாதா வீதி |
| சிவன் கோயில் பண்ணை வீதி | பூங்கா வீதி |
| மத்திய மேற்கு வீதி | பிரதான தேவாலய வீதி |
| பாசையூர் 4ஆம் குறுக்குத்தெரு | டேவிட் வீதி |
| அபூபக்கர் வீதி | கன்னியாஸ்திரி மடம் வீதி |
| வித்தியாலய வீதி | மாட்டீன் வீதி 1ஆம் குறுக்குத்தெரு |
| முஸ்லிம் வித்தியாலயம் வீதி | மாட்டீன் வீதி |
| சீனிவாசகம் வீதி | பதிப்பக வீதி |
| கன்னாதிட்டி வீதி | குருசோ வீதி |
| மத்தியூஸ் வீதி | ஆனந்தன் வடலி வீதி |
| கஸ்தூரியார் வீதி | மணிக்கூட்டு கோபுர வீதி |
| கில்னர் வித்தியாலய வீதி | ராஜசிங்கம் வீதி |







2. உள்ளூராட்சி திணைக்களம்

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | வேலையின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01. | நல்லூர் பிரதேச சபை | அரியாலை தென் கிழக்கு மணிப்புரி வீதி புனரமைப்பு | அரியாலை | 8.09 |
| 02. | வலி. கிழக்கு பிரதேச சபை | கோப்பாய், கிழவானை வீதி புனரமைப்பு | கோப்பாய் | 9.90 |
| 03. | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | குளனை வீதி புனரமைப்பு | துன்னாலை | 6.19 |

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நிதியின் கீழ் புனரமைக்கப்பட்ட கரவெட்டி மரக்கறிச்சந்தை அமைச்சர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

3. நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

இருபாலை, கரணவாய் ஆகிய இடங்களில் நிலத்தடி நீர்குழாய்கள் அமைத்தல் வேலை ஆரம்பிக்கப்பட்டதுடன் மணியந்தோட்டத்திலும் ஊரணியிலும் நீர் விநியோகித்தல் திட்டமும் அங்குராரப்பணம் செய்து வைக்கப்பட்டது.

4. இலங்கை மின்சார சபை

மணியந்தோட்டத்தில் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

5. வீதி அபிவிருத்தி அதிகார சபை

தெல்லிப்பளை-வல்லை -அராலி வீதி அபிவிருத்தி வேலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(சி-3734)

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான இராச்சியங்கள் அழிந்தன. -யங்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஈழத் தமிழினமே நீ செய்த பாவம் யாதோ!

ஈழத்தமிழ் இனம் உண்மையில் பாவப்பட்ட இனம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. பொதுவில் அரசியல்வாதிகளின் ஏமாற்றுவித்தைகளுக்கு ஆளாகி துன்பப்படும் இனங்கள் உண்டு.

ஆனால் ஈழத்தமிழ் இனமோ, அரசியல்வாதிகளால் மட்டுமல்ல சமயத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனச் சகலராலும் ஏமாற்றப்படுகின்றனர்.

அதிலும் ஈழத்தமிழர்கள் தனது இனம் சார்ந்தவர்களால் ஏமாற்றப்பட்டதே அதிகம் என்பது மிகக் கொடூரமான உண்மை.

தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துகின்றனர்.

அவர்கள் எவரும் தமிழ் மக்களின் அவலம் குறித்து தெளிவாக அறிந்திருக்கவில்லை.

எந்தளவுதூரம் பொய்யுரைக்க முடியுமோ அந்தளவு தூரம் பொய்யுரைக்கிறார்கள். தமிழ் மக்கள் படும் அவலம் மிகவும் மோசமானது. யாழ்ப்பாண நகரில் வாகனங்களை நிறுத்துவதில் கூட தமிழ், சிங்கள வாகனங்கள் எனப் பாகுபாடு காட்டப்படுகின்றது.

இதுவிடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஒருபோதும் கவனம் செலுத்தவில்லை.

இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே. எத்தனையோ பேரவலங்களை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் அனுபவிக்கின்றனர்.

ஆனால் இவை எதுவும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு தெரியவே தெரியாது.

இவர்களை விட சமயம், மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என்று ஒரு குழு ஓடித் திரிகிறது. தமிழ் மக்கள் படுகின்ற அவலங்கள், துயரங்கள் இவை எதுவுமே தெரியாமல் தமிழ் மக்களுக்காக பேசுகின்றார்கள். இவர்களோடு பேசுவதில் வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அபார மகிழ்ச்சி.

வடபுலத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எந்தளவு தூரம் தகவல்களை அறியாமல் இருக்கிறார்கள் என்ற ஆய்வுக்காக அவர்களுக்கு இவர்கள் உதவுகிறார்கள். இராப் போசனங்களோடு எங்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிப்போவர்.

இதைவிட அநியாயம் என்ன இருக்கிறது?

விஷப் பாம்புகளுக்குள்ளும் மனித விலங்குகளுக்குள்ளும் வாழ முடியாமல் தவிக்கும் வன்னி மக்களின், அவலம் தெரியாமல் இராப் போசன விருந்து நடக்கிறது. ஏதோ நடந்து முடியட்டும். நம் இனமே நமக்குப் பகையாக இருக்கும் போது நாம் என்ன செய்ய முடியும்?

# வாகரை காட்டுப் பகுதியில் பாரிய ஆயுதக்களஞ்சியம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகரைக்காட்டுப் பகுதியில் பாரிய ஆயுதக்களஞ்சியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு படைகளின் தலைமையக தலைமைப் புலனாய்வு அதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து கட்டுமுறிவுக் குளம் காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலிலேயே இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிழக்குப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபொஸ் பெரேராவின் நெறிப்படுத்தலில் இந்த தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது ரி-56 துப்பாக்கிகள்-36, ஆர்பிஜி உந்துகணை செலுத்திகள்-07, 12.7 மி.மீ விமான எதிர்ப்பு துப்பாக்கிகள்-7, எல்.எம். ஜி துப்பாக்கிகள்-5, எச்.எம்.ஜி துப்பாக்கிகள்-02, எம். பி.எம்.ஜி துப்பாக்கிகள்-03, 81 மி.மீ மற்றும் 60 மி.மீ மோட்டார்கள்-03 ஆகியனவே இந்த தேடுதலில் மீட்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் மிகவும் கவனமாக பொலித்தீன் பைகளினால் சுற்றப்பட்டு பிளாஸ்ரிக் பரல்களில் போடப்பட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுவொன்றே இந்த ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கலாம் என்று இராணுவத்தின் கிழக்குப் படைத்தளபதி சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மேஜர் ஜெனரல் பொனிபாஸ் பெரேரா அறிவித்திருந்தார். இந்த நிலையில் கிழக்கில் செயற்படும் ஆயுதக்குழுவே தமது ஆயுதங்களை புதைத்து வைத்துவிட்டு புலனாய்வுப் பிரிவிக்கு தகவல் கொடுத்திருக்கலாம் என்று இராணுவ வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# இந்த வருடத்தில் மின்சாரசபைக்கு 16 மில்லியனுக்கும் அதிக நட்டம் ஏற்படும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்திற்குள் இலங்கை மின்சார சபைக்கு 16 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நட்டத்தை எதிர்பார்க்க முடியுமென மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற மின்வெட்டு காரணமாக இந்த நட்டம் மேலும் அதிகரிக்கக் கூடுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் மின்வெட்டு அமுல்படுத்தப்படாவிட்டாலும் அவசர நேரங்களில் மின் துண்டிக்கப்பட்டதாக தெரிவித்த அவர் நீண்ட நேர மின் துண்டிப்பு இல்லாததால் அது குறித்து மக்களுக்கு அறிவிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தற்போது மின்தடை ஏற்படுத்தப்படுவதில்லை எனவும் அவ்வாறு மின்தடை ஏற்படுத்தப்படுவதற்கான தேவை ஏற்பட்டால் அது குறித்து அறிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மரம் முறிந்து விழுதல், விலங்குகளின் செயற்பாடு, மின்பிறப்பாக்கிகள் பிரச்சினை உள்ளிட்டவைகளால் ஒரு நாளைக்கு அதிக தடவைகள் மின் துண்டிக்கப்பட வேண்டி ஏற்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாலை 6.30 தொடக்கம் இரவு 9.30 வரையான மூன்று மணித்தியாலங்கள் அதிகம் மின் செலவிடப்படுவதாகவும் அதன்போது மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-4)

# ஆசிரியர் நியமனம் பெறும் அழகியல் பட்டதாரிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அழகியல் பட்டதாரிகள் 441 பேரில் திருமதி வீரலட்சுமி (சுழிபுரம் மத்தி), திருமதி சுதாகரன் சோபனா ( உடுவில் கிழக்கு) ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களது பெயர்கள் நேற்றும் நேற்று முன்தினமும் வெளியான வலம்புரிப் பத்திரிகையில் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# போலி இறப்பர் முத்திரை வைத்திருந்த நபருக்கு 6 வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

பிறப்பு மற்றும் பதிவாளர்கள், மாவட்ட பதிவாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோரின் போலி இறப்பர் முத்திரையைவைத்திருந்ததாககுற்றத்தை ஒப்புக்கொண்ட நபரொருவருக்கு 6 வருடகால கடூழிய சிறைத் தண் டனை விதித்து 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் பதுளை உயர்நீதிமன்ற நீதிபதி பி.விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

நுகதலாவையிலுள்ள வெலிமடை பகுதியைச் சேர்ந்த சுரபியல் சமரக்கோன் (வயது 60) என்பவருக்கு எதிரா இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த நபர் வெலிமடையிலுள்ள கெப்பிட்டிபொல வித்தியாலய அலுவலக உதவியாளராக முன்னர் பணியாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலவச இறுவெட்டு விநியோகம்

யாழ்.மத்திய கல்லூரி கலை மாணவ மன்றம் வெளியிட்ட சுழலும் சொல்லாடுகளமும் கைகேயி சூழ்வினைப்படல இறுவெட்டு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. இவ் இறுவெட்டு பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கல்விச் சேவைக்காக உயர்தர தமிழ் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

மேற்படி இறுவெட்டினைப் பெற விரும்பும் மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்தற் கடிதத்துடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ)

# ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் சனாதன தர்மம் -9 என்னும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற அஞ்சல் பாடசாலை அதிபர் ரி.ரி. சண்முகநாதன் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுவார். (ஸ்ரீ-35)

# சத்திய தரிசனம்



## எல்லாம் இறைவன் சேவையே

தனித்து வாழாதீர்கள், ஒதுங்கி இருக்காதீர்கள், மனம் விட்டுப் பழங்குங்கள், ஒற்றுமை உணர்வு மலர உதவுங்கள், அனைவரும் சேர்ந்தால் உறவு உறுதியாகும். அனைவரும் பிரிந்தால் அழிவுக்கு வழிபிறக்கும்.

பரஸ்பர அன்பு மூலம் அனைவரும்ஒன்று சேருங்கள். அது அனைவருக்கும் நல்லது. அன்பின் வடிவமானவர்களே ஒற்றுமையாக இருங்கள் .


கடமையைக் கருத்துடன் செய்வதே மனிதரின் பொறுப்பு .அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டிய பணிகளை தாமதமின்றி செய்து விடுங்கள். பலன் உறுதி. பிறருக்கு நீங்கள் செய்த உதவியையும் பிறர் உங்களுக்கு செய்த தீமைகளையும் மறந்து விடுவதே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நல்லது. நாம் எது செய்தாலும் அது இறைவனுக்கு செய்த சேவையே என்று எண்ணி தொண்டு புரிவதில் ஈடுபடுங்கள். பக்தியை பிறர் சொல்லக் கேட்டு உணர முடியாது. நல்ல ஒழுக்கத்தைத் தரும் போதனைகள் மனதில் பதிய வேண்டும். அவை நமது செயலில் பிரதிபலிக்க வேண்டும். புதிய எண்ணங்களிலும் தொண்டுகளிலும் மனதை செலுத்த வேண்டும்.



# நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தான இரதோற்சவ சிறப்புமலர்-14.07.2011



## ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி



நவாலியூரிலே குருக்கள் கோவில் எனப் போற்றப்படும் அட்டகிரிப்பதியிலே எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு இன்று இரதோற்சவம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மும்மலங்களையும் அழிக்கும் சக்தி பொருந்திய சண்முகப்பெருமான் மகாவல்லி கஜவல்லியோடு புதிதாக மெருகூட்டப்பட்ட அழகிய சித்திரத் தேரில் எழுந்தருளும் காட்சியைக் காண வரும் பக்தர்களுக்கு எல்லாம்வல்ல சண்முகப் பெருமான் அருள்கிடைக்க பிரார்த்தித்து அமைகின்றேன்.

அடிநாடிப் பணிவார்தம் அகம் இருப்பான் -ஐயன்
அருள் தந்து எமைக்காப்பான் அட்டகிரியான்

**சிவஸ்ரீ. கா.துரைசாமிக்குருக்கள்,**
**ஆலயபிரதமகுரு.**


## வேல் கொண்டு வெவ்வினையை வேரறுத்த எம் வேலன்....


நவாலி அட்டகிரிப் பகுதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் கலியுகவரதன் முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெற திருவருள் கிட்டியுள்ளது. அழகிய சித்திரத் தேரில் ஆரோகணித்து வரும் எம்பெருமானின் அற்புதக் காட்சியை காண நாம் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

அடியார்களின் துன்பங்களைக் களைந்து இன்பங்களை தரும் தேர்த்திருவிழா மஹோற்சவத்தில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது.

அழித்தலைக் குறித்து நிற்கும் இன்றைய தேர் உற்சவம் அடியார்களின் இடர் போக்கும் சிறந்த உற்சவமாகும்.அடியார்கள் பக்தியுடன் வடம் பிடித்திழுக்க மங்கள இசை வானைப்பிளக்க முருகப் பெருமான் தேரேறி வரும் காட்சியை காண கண்கோடி வேண்டும்.

**தர்மகர்த்தா சபை**
**நவாலி அட்டகிரி கந்தசுவாமி**
**தேவஸ்தானம்.**





## மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



அட்டகிரி வேலனைப் பணிந்து வந்தனை செய்வோம். ஸ்ருஷ்ட்டி,ஸ்திதி,சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்கள் அடங்கியதே இந்த மஹோற்சவமாகும். இந்த மஹோற்சவம் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் நவாலி மஹாநகரிலே கோயில் கொண்டு தம்மை அண்டியவர்க்கு அருள்மழை பொழிந்து காத்துரட்சிக்கும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானுடைய இவ்வருட மஹோற்சவத்தில் பத்தாவது தினமாகிய ஆனி மாதம் 29 ஆம் நாள் (14.07.2011) வியாழக்கிழமையன்று இரதத்தில் ஆரோகணித்து வீதி வலம்வரும் அரும் பெரும் காட்சியைக் கண்டு, மனதாரத் தொழுது, வரும் பக்தர்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் நிறைந்த வாழ்க்கை அமைய பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோபவந்து

பிரம்மஸ்ரீ சி. பாலஷண்முகக்குருக்கள்,
மஹோற்சவ குரு

### சரவண பவ எனும் நாமம்!

பால்காவடி பன்னீர் காவடி புஸ்பக்காவடி
மால்மருகன் முருகனுக்கு மச்சக் காவடி
எத்தனையோ காவடிகள் திருக் குமரன்
சந்நதியில்
அத்தனையும் வினை தீர்க்கும் ஐயமே
இல்லை...!!
சரவணபவ எனும் நாமம்
குலச்சுடர் ஒளிதனை ஏற்றும்
நலம் தரும் நம்பிக்கை வளர்க்கும்
உலகினில் இன்பங்கள் பெருக்கும்
இடர் வரும் திசைதனில் ஒலிக்க -அவை
பயம்கொண்டோடிட விரட்டும்
திருமறை தந்திட்ட வேதம் -அதுவே
சரவண பவ எனும் நாமம்!!!

### முத்தமிழ் வேந்தன்

*சிங்கார வேலன்*
*சிவசக்தி பாலன்*
*மங்காத தீபம்*
*மாமலையின் ஜோதி*
*தத்துவம் புகட்டிடும்*
*உத்தம ரூபன்*
*நற்றமிழ் தந்திடும்*
*முத்தமிழ் வேந்தன்*
*ஓம் சரவண பவ!!!*



**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்**






சிறி தேவி கருமாரி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
83/01, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
T.P.:021 5672567





சுந்தர்சன்
இலத்திரனியல் சாதனங்களை இறக்குமதி செய்பவர்களும், விநியோகத்தர்களும் ...
யாழ் வீதி , மானிப்பாய்
T.P./Fax :- 021 225 5136
sundharsan@yahoo.co.uk





பவித்திரா ரான்ஸ்போட்
புலவர் வீதி,
நவாலி.
T.P:-0771285120

# அனுதாப வாக்குகள் எமக்கு தேவையில்லை

## அம்பாந்தோட்டை பிரசாரக் குழு சொல்கிறது

2018ஆம் ஆண்டின் பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்தும் உரிமையை பெறுவதில் அனுதாப வாக்குகள் தேவையில்லை எனவும் தகுதியடிப்படையில் அதற்கு போட்டியிட விரும்புவதாகவும் அம்பாந்தோட்டை -2018 பிரசாரக் குழு தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுவிழாவை நடத்துவதற்கு இலங்கையின் அம்பாந்தோட்டை நகரமும் அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ் நகரமும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகள் அரசியல் காரணங்களுக்காக இலங்கைக்கு வாக்களிக்கக் கூடும் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக அம்பாந்தோட்டை பிரசாரக் குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான நளின் ஆட்டிகல கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் எந்தவொரு அபிவிருத்தியடைந்து வரும் நாட்டையும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

குறிப்பாக பொது நலவாய போட்டிகளுக்கு தயார்படுத்தல் விடயத்தில் குறைத்து மதிப்பிடக் கூடாது. இலங்கை எந்தவொரு நாட்டினதும் அனுதாப வாக்குகளை தேடவில்லை. மாறாக நாம் பெறும் வாக்குகள் தகுதியடிப்படையானதாக இருக்கும் என்றார்.

அதேவேளை இப் போட்டிகளை நடத்தும் உரிமை இலங்கைக்கு கிடைத்தால், 2016 ஆம் ஆண்டிற்குள் இதற்கான நிர்மாணங்கள் பூர்த்தியடைந்திருக்கும் எனவும் அவர் கூறினார்.

17 விளையாட்டுக்களில் 15 விளையாட்டுக்களை ஒரே விளையாட்டு அரங்கத் தொகுதியில் கொண்டிருக்கும் அனுகூலத்தையும் நாம் பெற்றிருப்போம் என அவர் தெரிவித்தார்.

## உலக செஸ் போட்டி சென்னையில்



உலக சதுரங்கப் போட்டி (World Chess Championship) அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் சென்னையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் இந்தியாவில் முதல் முறையாக நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னையில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக சதுரங்கப் போட்டியில் தற்போதைய சம்பியனான இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை எதிர்த்து இஸ்ரேலின் கிராண்ட் மாஸ்டர் போரிஸ் கெல்ஃ பேண்டு விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சதுரங்கப் போட்டியில் இந்தியாவில் இருந்து கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை பெற்றுள்ள 24 பேரில், 10 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளை நடத்த தமிழக அரசு 20 கோடி ரூபாய்களை ஒதுக்குகிறது.

# சச்சினை புகழ்கிறார் ஹாலிவுட் 'ஹீரோ'



கிரிக்கெட் அரங்கில் சச்சின் உண்மையிலேயே ஒரு ஜாம்பவான். நான் அவரது தீவிர ரசிகன். அவரைச் சந்தித்து ஆட்டோக்கிராப் வாங்க காத்திருக்கிறேன் என பிரபல ஹாரிபாட்டர் படத்தின் ஹீரோ டானியல் ராட்கிளிப் விருப்பம் தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்தைச் சேர்ந்த இளம் ஹெலிவூட் நடிகர் ராட்கிளிப். இவர் நடித்து வெளி யான ஹாரிபாட்டர் படம் உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கிரிக்கெட் பிரியரான இவர், இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினை சந்திக்க ஆசைப்படுகிறார்.

இது குறித்து ராட்கிளிப் அளித்தப் பேட்டியில், இந்தியாவைப் பற்றி நிறைய விடயங்கள் கேள்விப்பட்டிருக்கிறேன். அங்குள்ள மக்கள் என்னைப் போலவே கிரிக்கெட் மோகம் கொண்டவர்கள் என்பது தெரியும். சமீபத்தில் நடந்த உலகக் கோப்பைத் தொடரின்போது இந்தியா வரத்திட்டமிட்டிருந்தேன். ஆனால் இசை அல்பத்தில் மிகவும் பிசியாக இருந்ததால் எனது பயணம் தள்ளிப்போனது.

மிகவிரைவில் இந்தியா செல்லவுள்ளேன். கிரிக்கெட்டில் சச்சின் உண்மையிலேயே ஒரு ஜாம்பவான். நான் அவரது தீவிர ரசிகன் விரைவில் அவரை சந்தித்து ஆட்டோக்கிராப் வாங்கவுள்ளேன். அந்த திரில் அனுபவத்திற்காக நானும் எனது நண்பர்களும் காத்திருக்கிறோம். இவ்வாறு ராட்கிளிப் கூறினார்.

# உலகக் கோப்பை கால்பந்து அரையிறுதியில் அமெரிக்கா

பயிற்சியில் ஈடுபடும் அமெரிக்க வீராங்கனை



பெண்களுக்கான உலக கோப்பை கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு அமெரிக்கா, சுவீடன் உள்ளிட்ட அணிகள் முன்னேறின. ஜேர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதியில் அமெரிக்கா-பிரேசில் அணிகள் மோதின. ஆட்டத்தின் 2 ஆவது நிமிடத்தில் பிரேசில் வீராங்கனை டையானி சேம் சைடு கோல் அடித்து ஏமாற்றினார். இதனால் முதல் பாதி முடிவில் அமெரிக்க அணி 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் சுதாரித்துக் கொண்ட பிரேசில் அணிக்கு, ஆட்டத்தின் 68 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கோர்னர் வாய்ப்பை மார்டா, கோலாக மாற்றினார். தொடர்ந்து போராடிய இரு அணி வீராங்கனைகளால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்டநேர முடிவில் போட்டி 1-1 என சமநிலை அடைந்தது.

பின் இரு அணியினருக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. கூடுதல் நேரத்தின் முடிவில் 2-2 எனசமநிலைஅடைந்தது.

இதனால் போட்டியின் முடிபு பெனால்டி ஷூட் அவுட்முறைக்குசென்றது. இதில் அபாரமாக செயல்பட்ட அமெரிக்க அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**ஆஸி... அவுட்**

மற்றொரு காலியுறுதியில் அவுஸ்திரேலியா-சுவீடன் அணிகள் மோதின இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சுவீடன் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக (2003, 2011) அரையிறுதிக்கு முன்னேறியது. கடந்த 2003 இல் இறுதிவரை முன்னேறிய சுவீடன் அணி இரண்டாவது இடம் பிடித்தது.

**அரையிறுதியில் யார்?**

காலிறுதிப் போட்டிகளின் முடிபில் ஜப்பான், பிரான்ஸ், சுவீடன், அமெரிக்கா உள்ளிட்ட நான்கு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. இதில் நாளை நடக்கவுள்ள அரையிறுதியில் பிரான்ஸ்-அமெரிக்கா, ஜப்பான் - சுவீடன் உள்ளிட்ட அணிகள் மோதுகின்றன.

# சாதனை பற்றி நினைப்பதில்லை -சச்சின்

(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் இதுவரை 99 சர்வதேச சதங்களை விளாசி உள்ளார். லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடக்க உள்ள முதல் டெஸ்டில் அவர் 100 ஆவது சதத்தை பூர்த்தி செய்து மகத்தான சாதனை படைப்பார் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து சச்சின் டெண்டுல்கர் கூறுகையில்,

சாதனைகள் பற்றி ஒருபோதும் நினைப்பதில்லை. எனது வெற்றியின் ரகசியமே அதுதான். இங்கிலாந்து தொடரில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பது மட்டுமே எனது நோக்கமாக இருக்கும். ஒவ்வொரு ஆட்டத்தையும் அனுபவித்து விளையாட வேண்டும் என நினைப்பவன் நான். அப்படி விளையாடினால் சாதனைகள் தானாக வந்து சேரும் என்றார்.

# இங்கிலாந்து சுற்றுப்பயணம்; இந்திய அணி அறிவிப்பு

இங்கிலாந்து சுற்றுப் பயணத்திற்காக 17 பேர் கொண்ட இந்திய அணி வீரர்கள் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காம்பீர், யுவராஜ் சிங், சகீர் கான், ஸ்ரீசாந்த் மற்றும் ரித்திமான் சகா ஆகியோர் இடம்பெற்றுள்ளன.

இந்தியக் கிரிக்கெட் அணித்தலைவர் தோனி தலைமையில் இங்கிலாந்தில் சுற்றுப்பணம் மேற்கொண்டு அணித்தலைவர் ஸ்ரொரஸ் தலைமையிலான அந்த அணிக்கு எதிராக விளையாட இருக்கிறது.

இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு இடையே 4 டெஸ்ட் போட்டி, ஒரே ஒரு இருபது -20 போட்டி மற்றும் 5 ஒரு நாள் போட்டி ஆகியவை நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. வரும் 21 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை இந்தத் தொடர் நடக்கிறது.

இரு அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் வரும் 21-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை நடக்கிறது. அடுத்ததாக டிரன்ட் பிரிட்ஜ் மைதானத்தில் 2 ஆவது டெஸ்ட் போட்டி இந்த மாதம் 29 ஆம் திகதி தொடங்கி அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை நடக்கிறது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி எட்க்பாஸ்டன் நகரில் ஓகஸ்ட் 10-ம் திகதி முதல் 14-ம் திகதிவரை நடக்கிறது.

கடைசி மற்றும் 4 ஆவது டெஸ்ட் கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் 18ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடக்கிறது.

சமீபத்தில் இந்திய அணி மே.இ.தீவில் சுற்றுப் பயணம் செய்தது. இதில் இடம்பெறாத 5 இந்திய வீரர்கள் இங்கிலாந்து சுற்றுப் பயணத்திற்காக விமானம் மூலம் லண்டன் கிளம்பிச் சென்றனர்.

துணை அணித்தலைவர் கௌதம் காம்பீர், யுவராஜ் சிங், சகீர்கான், ஸ்ரீசாந்த் ஆகியோர் காயம் காரணமாக கடந்த சுற்றுப் பயணத்தில் இடம்பெறவில்லை.

தவிர, நட்சத்திர வீரரான டெண்டுல்கர் மற்றும் வீரேந்தர சேவாக் இருவரும் தற்போது இங்கிலாந்தில் உள்ளனர். அவர்கள் அங்கிருந்தவாறு இந்திய அணியுடன் இணைந்து கொள்வார்கள்.

அதிரடி தொடக்க வீரரான சேவாக் தோள்பட்டை காயத்திற்காக லண்டனில் சிகிச்சை எடுத்து வந்தார். மேற்படி இருவரும் மேற்கிந்திய தீவு பயணத்தில் பங்கேற்கவில்லை.

இந்திய அணி விபரம்: மகேந்திர சிங் தோனி (அணித் தலைவர்), கௌதம் காம்பீர் (துணைத் தலைவர்), அபினவ் முகுந்த், ராகுல் டிராவிட், டெண்டுல்கர், வி.வி.எஸ் லக்ஸ்மன், சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சகீர்கான், ஸ்ரீசாந்த், பிர வீன் குமார், இஷாந்த் சர்மா, அமித் மிஸ்ரா, முனாப் படேல்,ரித்திமான் சகா மற்றும் வீரேந்தர் சேவாக்.



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக லண்டன் செல்ல, மும்பை விமான நிலையம்-வந்த இந்திய கிரிக்கெட் வீரர் காம்பிர்.

மாபெரும் மலிவு விற்பனை

அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணினிகள் மலிவு விலையில், உத்தரவாதத்துடன்

INTEL PENTIUM 4- 3.0 GHZ,
512 RAM, 80GB HDD,
DVD ROM, KEYBOARD, MOUSE
10,750/=மட்டுமே

LCD MONITOR கள் ரூபா 4,900/=ல் இருந்து
CRT MONITOR கள் ரூபா 2,900/=ல் இருந்து

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
Phone : 021 2224692, 077 135 0476, 077 968 9043





உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com


# தேர்தல் முறைப்பாடுகள் குறி...

தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் வகையில் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் யாழ்.தேர்தல் முறைப்பாட்டு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டன. இதுவரை 8 முறைப்பாடுகளை கூட்டமைப்பு பதிவு செய்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக சரியான தகவல்கள் அறியப்பட்டு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக பிரதித் தேர்தல் ஆணையாளர். எம்.மொகமட் யாழ்.வருகை தந்துள்ளார்.

இவரின்தலைமையிலேயேஇந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

தமது கட்சி சார்ந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள், அச்சுறுத்தல்கள் தொடர்ந்தால் தாம் தேர்தல் ஆணையாளர் மூலம் பொலிஸ் பாதுகாப்பை பெற முயற்சிக்கப் போவதாகவும், அத்தகைய தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்ந்து இடம்பெறாது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வேண்டுகோள் விடுத்தனர்.

அதுமட்டுமன்றி வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸார் மட்டும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டால் போதும். இராணுவத்தினர் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவதை மக்கள் விரும்பவில்லை எனவும் தெரிவித்தனர். தொடர்ந்து உரையாற்றிய பிரதித்தேர்தல் ஆணையாளர் மொகமட் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் தற்போது நடத்தப்படும் தேர்தல் போன்று இதுவரை எந்தத் தேர்தலும் இவ்வளவு அமைதியான சூழ்நிலையில் நடந்ததில்லை.

தேர்தல் காலங்களில் இவ்வாறான சட்ட மீறல்கள் இடம்பெறுவது வழமை. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இராணுவத்தினர் கடந்த கால தேர்தல்களில் பணியில் ஈடுபட்டது போல் இம்முறை பணியில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் அதிகாரம் தேர்தல் திணைக்களத்திற்கே உரியது.

அமைதியான முறையில் தேர்தல் இடம்பெறவேண்டும். அதற்கு கட்சிகள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்தோடு முறைப்பாடுகள் தொடர்பாக அறிக்கை தேர்தல்திணைக்களத்தில்சமர்ப்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# தாய் நாட்டுக்கு எதிரான சதியை...

செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந் நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசவங்கிகளில் 1500 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதாக நாம் உறுதியளித்தோம்.

அதனை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம். நாம் 2005 ஆம் ஆண்டு பதவியேற்றபின்னர் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளோம். அரச துறையில் மேலும் 15 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது திட்டமிட்ட செயற்பாடுகளே நாம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய காரணமாகியது. 30 வருட யுத்தத்தின் போதும் நாம் எமது பொருளாதாரத்தை திட்டமிட்டு முன்னெடுத்தோம்.

அதனால்தான் அனைத்து நெருக்கடி நிலையிலும் முழு உலகமுமே பொருளாதார நெருக்கடியை சந்தித்த போதும் நாம் அதிலிருந்து மீள முடிந்தது.

நம் நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தியில் கட்டியெழுப்பிய போது அதை பொறுக்கமாட்டாதவர்கள் விசமப் பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்குச் சென்று இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்க வேண்டாம் எனக் கூறினர்.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் இல்லையென பிரசாரம் செய்து அமெரிக்காவுக்குச் சென்று அரசாங்கத்திற்கு உதவக் கூடாது என வலியுறுத்தி வந்தனர்.

இத்தகைய சவால்களுக்குள்ளேயே நாம் எமது பொருளாதாரத்தை நிலையானதாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

யுத்தம் இடம்பெற்ற நாடுகளில் இலங்கையைப் போன்று விரைவான மீள்குடியேற்றம் வேறு எங்கும் இடம்பெற்றதில்லை. இடம்பெயர்ந்த 3 இலட்சம் பேரில் தற்போது 10 ஆயிரம் பேரே மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். எம்மை நெருக்கடிக்குள்ளாக்குவோர் இது பற்றி சிந்திப்பதில்லை. அவர்கள் வேறு கோணத்தில் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ந)

# இழுத்தடிக்காமல் கூட்ட...

லாளர் திஸ்ஸ அத்நாயக்க இனப்பிரச்சினைத்தீர்வு விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசுக்கும் இடையே நடத்தப்படுகின்ற பேச்சுக்களில் எடுக்கப்படும் இணக்கப்பாடுகள், அரசு முன்வைக்கும் யோசனைகள் ஆகியன குறித்து அரசு நாடாளுமன்றில் தெரிவிக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசு தாமதம் செய்கிறது. அதற்கான யோசனைத் திட்டங்களை அரசு முன்வைக்காமல் இழுத்தடித்துவருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

தீர்வுகாணும் பேச்சுக்களை எனிமேலும் அரசு இழுத்தடிக்காது தீர்வுத்திட்டத்தை உடனடியாக முன்வைக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது அளவெட்டியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் இன்றுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. அத்துடன் விசாரணைகளும் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன எனவும் அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

துப்பாக்கிக்கு பதிலாக வாக்காளர் அட்டையை அறிமுகப்படுத்தும் போது மீண்டும் துப்பாக்கியை திரும்பிப்பார்க்காத அளவு அந்த பகுதி மக்களின் மனங்களை அரசு வெல்லவேண்டும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-2)

# எதிர்க்கட்சிகள் நாட...

சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்று வருவதாக போலியான குற்றச்சாட்டுக்களை ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் முன்வைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் மட்டுமே வடக்கில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களின் எதுவித உண்மையும் கிடையாது.

வடக்கில் எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் எவ்வித அச்சுறுத்தல்களோ இடையூறுகளோ ஏற்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தெற்கை விடவும் அமைதியான முறையில் வடக்கில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஒரு சில சிறிய சம்பவங்கைத்தவிர வடக்கில் அமைதியான சூழ்நிலை நிலவிவருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா சிந்தாமணி



30/11, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த அமரர் கந்தையா சிந்தாமணி அவர்கள் 12.07.2011 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் சிவபாக்கியம்-பிரான்ஸ், நாகேஸ்வரி, சிவசுப்பிரமணியம்-ஜேர்மன், சிங்கராஜா-கனடா, நந்தினி, சிவபாலன்-ஜேர்மன், அன்னப்பிள்ளை -ஜேர்மன், சிவகுமார், புவனேஸ்வரி-ஜேர்மன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் சுப்பிரமணியம், திருஞானசம்பந்தர், செல்வராணி -ஜேர்மன், ஜெகநாதன், சசி -ஜேர்மன், சந்திரபாலன் -ஜேர்மன், புஸ்பராணி, ரஜனகுமார் -ஜேர்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.07.2011 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/11, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-3732)


MyWay English இன் இலவச ஆங்கில பயிற்சிப்பட்டறை
ENGLISH WORKSHOP

ஆங்கிலம் பேசுவதற்கு தேவையான அனைத்து விடயங்களும்
இரண்டு மணிநேரத்தில் முழுமையாக கற்பிக்கப்படும்

காலம் : 14.07.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : 8.00 - 10.00, 10.00-12.00. 2.00-4.00, 4.00-6.00
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

இடம் : யாழ் மத்திய கல்லூரி
அனுமதி இலவசம்
* ADMISSION
* CERTIFICATE
* BOOK
ALL FREE

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், வங்கியாளர்,
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், பட்டதாரிகள்,
A/L மாணவர், இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கலந்துகொண்டதற்கான
சான்றிதழ், மற்றும் கற்றல் புத்தகம் முற்றிலும் இலவசம்

MyWay English
182 , Stanley Rd, Jaffna
077 33 63 456



சகல விதமான கணினிகளும் உங்கள் வீடுகளுக்கோ அலுவலகங்களுக்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும்
Operating System Install/Repair
Hardware Repair
Virus Removal
Networking Setup
Remete Support
Call 021 222 4692
PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur


## INFORMATION TECHNOLOGY PARK

ITP

*UNDER THE PURVIEW OF THE*

MINISTRY OF TECHNOLOGY AND RESEARCH

127, K.K.S. Road, Jaffna. Sri Lanka
T.P: 021-222 3641
Fax: 021-222 3643

### இடை வரவு விரிவுரையாளர்கள் தேவை

தகவல் தொழில் நுட்ப பூங்காவின் கல்விச் செயற்பாடுகளை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம். அதன் பொருட்டு கணனித்துறை சார்ந்த பாடங்களை போதிப்பதற்கு இடை வரவு விரிவுரையாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 25.07.2011 (திங்கட்கிழமை) ற்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு தமது சுயவிபரக் கோவையை தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகள், தம்மால் விரிவுரையாற்றக்கூடிய கணனித்துறை சார்ந்த பாடங்கள் ஆகியவை உள்ளடங்கலாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். த்பால் உறையின் இடது பக்க மூலையில் இடைவரவு விரிவுரையாளருக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:- *நிறைவேற்று அதிகாரி,*
*தகவல் தொழில் நுட்ப பூங்கா,*
*127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

- விண்ணப்பதாரிகள் கணனித்துறை சார்ந்த பட்டங்களை பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தகைமைகளையும் போதிய கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
- நேர்முகப்பரீட்சை மூலம் இடைவரவு விரிவுரையாளர் தேர்வு நடைபெறும் என்பதுடன் விரிவுரையாற்றும் மணித்தியாலங்களின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படும்.

நிறைவேற்று அதிகாரி. (சி-3711)

அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.